—நேத்திரா லோகத் தைலம



இக் கூந்தல் தைலமானது 100 ஆண்டு காலா் இலங்கை மக்களால் மாத்திரமின்றி உலக மக்களாலு பாவிக்கப்படும் அரும் பெருந் தைலமாகும். தலை சம்பந்தப்பட்ட சகல பிணிகளுக்கு நல்ல நிவாரணி!

½ போத்தல் ரூபா 21-50. 1 போத்தல் ரூ 42-50 தபால் செலவு ரூபா 9-00 வி.பீ.பீ உண்டு.

கலாநிதி டபிள்யு, கே ஜினதாஸ
161, ஒல்கொட் மாவத்தை. கொழும்பு-11.
தொ பே 25095



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6567 1990 ஏப்ரல் 19 வியாழக்கிழமை * * * தினபதி



கஸ்தூரி கல்பயோக



100 ஆண்டுகளாக பிரபல்யம் பெற்றது! கல்பயோகய நரம்புத் தளர்ச்சி. உற்சாகமின்மையை நீக்கி சக்தியைத் தரவல்லது. வாதம், சிறுநீர் வியாதிகளையும் குணமாக்கும் ஔஷதம். ஆண், பெண், குழந்தைகள் அனைவருக்கும் ஏற்றது.

விலை 40/- தபால் செலவு 5/75

கலாநிதி டபிள்யூ கே ஜினதாஸ
161, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11.
தொ பே 25095


# கூட்டம் நடத்துவதற்கு இனிமேல் தடை இல்லை

## அவசரகாலச் சட்டம் மேலும் தளர்த்தப்பட்டது

### சொத்துக்களை எடுத்தல், தடுத்து வைத்தல் சம்பந்தமான விதிகளும் நீக்கம்

கொழும்பு, ஏப்ரல் 18

நிலைமை அபிவிருத்தி அடைந்து வருவதால் அவசரகாலச் சட்டம் நேற்று நள்ளிரவு முதல் மேலும் தளர்த்தப்பட்டிருக்கிறது. கூட்டங்களை நடத்துவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டு விட்டது. சொத்துகள், வாகனங்களை எடுத்தல் ஆட்களைத் தடுத்து வைத்தல் தொடர்பான விதிகளும் நீக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சிவில் பாதுகாப்பு ஆணையாளர் போன்றோரை நயமித்தல் ஆகிய விதிகள் இப்பொழுது தளர்த்தப்பட்டிருக்கின்றன-

பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கான விதிகள் தளர்த்தப்பட்டு சம்பந்தப்பட்ட பொலிஸ் விதிகளின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன- ஆட்களைத் தடுத்த


ஒருவரிடம அல்லது ஜனாதிபதியினால் நியமிக்கப்படும ஒருவரிடம ஆள் எவரேனும சரணடையலாம-

இளைஞர் அமைதியின்மை தொடர்பான ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட சுதந்திர சரணடைதல் குழு நாளை முதல் இயங்கும.

சின் அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வருடம பெப்ரவரி 15ஆம திகதி நள்ளிரவு முதல் பல அவசர கால விதிகள தளர்த்தப்பட்டமை தெரிந்ததே.

வெளியீடுகளுக்கான கட்டுப்பாடு, சடலங்களை விசாரணையின்றி புதைத்தல், எரித்தல், அரசியல் கட்சிகள், இயக்கங்கள்



கள்ளச் சாராயம வைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் கொள்கலன்களைப் படத்தில் காணலாம- (ல)

வென்னப்புவையில்

## கள்ளச் சாராய வடிசாலை முற்றுகை

கொழும்பு, ஏப் 18

கள்ளச் சாராய வடிசாலை ஒன்றை முற்றுகையிட்ட நீர்கொழும்பு பொலிஸார் பெருந் தொகையான கசிப்பையும் ஸ்பிரிட்டையும மற்றும உபகரணங்களையும கைப்பற்றி

மளவு கள்ளச் சாராயத்தை அந்த இடத்திலேயே பொலிஸார் தரையில் ஊற்றினர்- உபகரணங்களையும உடைத்து நாசமாக்கினர்-

45 கலன்கள் கொள்ளக் கூடிய 21 பீப்பாய்கள், 103 வெற்று பிளாஸ்டிக் பீப்பாய்கள், 3

வடக்கு கிழக்கில்

## அன்னை பூபதி நினைவாக இன்று

### பல்வேறு நிகழ்ச்சிகள்

கொழும்பு, ஏப். 18

அன்னை பூபதியின் நினைவாக வடக்கு கிழக்கு பகுதிகளில் பரந்தளவில் பேரணிகள் கூட்டங்கள் இன்று இடம பெறவிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இவற்றை ஏற்பாடு செய்துள்ளது.

திருகோணமலை மூதூர் மட்டக்களப்பு அமபாறை வவுனியா கிளிநொச்சி யாழ்ப்பாணம முல்லைத்திவு ஆகிய இடங்களில் சம காலத்தில் நிகழ்ச்சிகள் நடைபெற முன்னணி ஒழுங்குகள் செய்துள்ளது.

அமபாறை மாவட்டத்தில் இன்று பேரணியுடன் காரைதிவு விபுலானந்த மகா வித்தியாலய மைதானத்தில் கவியரங்கு பட்டிமன்றம பூபதி பற்றிய உரை,

(2ஆம பக்கம பார்க்க)

18 மாத காலத்துக்குள்

## யாழ். நகரில் நீர்பிரச்சினை தீரும்

— கே அரசரத்தினம —

யாழ்ப்பாணம, ஏப் 17

18 மாத காலத்திற்குள் யாழ்நகர் தண்ணீர் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும- தண்ணீரை நிலாவெளியில் இருந்து கொண்டு வரும வேலைகள் ஆரமபிக்கப்பட்டுள்ளன-

80 லட்சம ரூபா செலவில்

(2ஆம பக்கம பார்க்க)

## கண்ணிவெடியில் சிக்கிய இருவர் காயம்

கொழும்பு ஏப் 18

காட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி வெடித்ததால் இராணுவ கோப்ரல் ஒருவரும இராம

## காலநிலை 24மணித்தியாலம் நீடிக்கும்

கொழும்பு, ஏப்- 18

நாட்டில் தற்போது நிலவும் காலநிலை தொடர்ந்து 24 மணித்தியாலத்திற்கு நீடிக்கும் என காலநிலை அவதான நிலையம அறிவித்துள்ளது

நேற்றுக் (18 ஆம

றன-

பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கான விதிகள் தளர்த்தப்பட்டு சம்பந்தப்பட்ட பொலீஸ் விதிகளின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன- ஆட்களைத் தடுத்து வைப்பதற்கான விதிகளில் மேலும் தளர்த்தப்பட்டுள்ளன-

புதிய விதியின்படி பொலீஸ், இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய உத்தியோகத்தர்

தொடர்பான ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட சுதந்திர சரணடைதல் குழு நாளை முதல் இயங்கும்.

வழிதவறிய இளைஞர்கள் மீண்டும் பொது வாழ்வில் சேர்வதற்கு இது வாய்ப்பாக அமையும் என நம்பப்படுகிறது.

இந்தக் குழுவிடம் சரணடையும் இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படும்.

இப்படி பாதுகாப்பு அமைச்

டமை தெரிந்ததே.

வெளியீடுகளுக்கான கட்டுப்பாடு, சடலங்களை விசாரணையின்றி புதைத்தல், எரித்தல், அரசியல் கட்சிகள், இயக்கங்கள் மீதான தடைகள் என்பன இதன் மூலம் நீக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச பதவியேற்று எட்டு நாட்களுக்கிடையில் அதாவது ஜனவரி ஆரம்பத்தில் அவசரகாலச் சட்டத்தை நீக்கினார்- அத்தோடு தடுத்து வைக்கப்பட்டிருந்த 1800க்கும் அதிகமானோரையும் விடுவித்தார்-

ஒன்றை முற்றுகையிட்ட நீர்கொழும்பு பொலீஸார் பெருந்தொகையான கசிப்பையும் ஸ்பிரிட்டையும் மற்றும் உபகரணங்களையும் கைப்பற்றினர்-

வென்னப்புவ பொலீஸ் பகுதியில் உள்ள நைனாமடம் என்ற இடத்திலேயே இந்த வேட்டை நடந்தது- கைப்பற்றப்பட்ட கள்ளச் சாராயத்தின் பெறுமதி சுமார் 5 லட்சம் ரூபாவாகும்-

இந்த வேட்டையின் போது ஒரு பெண்ணும் மூன்று ஆண்களும் கைது செய்யப்பட்டனர்-

கைப்பற்றப்பட்ட பெரு

யும் உடைத்து நாசமாக்கினர்-

45 கலன்கள் கொள்ளக் கூடிய 21 பீப்பாய்கள், 103 வெற்று பிளாஸ்டிக் பீப்பாய்கள், 3 இரும்பு பீப்பாய்கள், பெருந்தொகையான செப்பு பைப்புகள், 34 சாக்கு புளுப்பு நிற சீனி.

(2ஆம பக்கம பார்க்க)

காட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி வெடித்ததால் இராணுவ கோப்ரல் ஒருவரும் கிராமவாசி ஒருவரும் படுகாயமடைந்தனர்-

நேற்ற (18 ஆம திகதி) பகல் அம்பாறை மங்களகமவில் இந்

(2ஆம பக்கம பார்க்க)

மணித்தியாலத்திற்கு நீடிக் கும் என காலநிலை அவதான நிலையம அறிவித்துள்ளது.

நேற்றுக் (18 ஆம திகதி) காலை 8-30 மணிக்கு முடிவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் நாட்டின் பல பகுதிகளில் இடி மின்னலுடன் பலத்த

(2ஆம பக்கம பார்க்க)

## ஜீ. சி. ஈ.( உ./த.) பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பலாம்

கொழும்பு, ஏப் 18

ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தற்சமயம் கோரப்பட்டுள்ளன-

பாடசாலை ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் இப் பரீட்சைக்கு தோற்றும பரீட்சார்த்திகள்

(2ஆம பக்கம பார்க்க)

## தேர்தல்கள் ஒரே நாளில்

கொழும்பு, ஏப்- 18

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு முன்னதாக தற்போது இயங்கிவரும் உள்ளூராட்சி சபைகளூாக கலைக்கப்பட்டு ஒரே நாளில் தேர்தல்கள் நடத்தப்படுமா-

இது குறித்து அரசு உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது-

மாநகர சபை, நகர சபை. பிரதேச சபை தேர்தல்கள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்த தேர்தல் திணைக்களம தீர்மானித்துள்ளது-

[ல-ர]

## நோன்பு தொழுகை நேரங்கள்

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — | 4-26 |
| சுபஹ் | — | 4-41 |
| சூரிய உதயம | — | 6-01 |
| லுஹர் | — | 12-20 |
| அஸர் | — | 3-20 |
| மஃரிபு | — | 6-18 |
| இஷா | — | 7-38 |

## இராணுவகோப்ரல் சக அதிகாரியை, சுட்டுக் கொன்றார்,

கொழும்பு ஏப் 18

இராணுவ கோப்ரல் ஒருவர் ஆத்திரத்தில் சக அதிகாரியை சுட்டுக் கொன்றார்-

சார்ஜன்ட் மேஜர் வில்பிரட் ஜோசப் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர்-

இரவு உணவுக்குப் பின்னரே இந்த சம்பவம் மதுருஓயா முகாமில் கடந்த சனிக்கிழமை நடந்த

(2ஆம பக்கம பார்க்க)

## இடமாற்றம் பெறும் ஊழியருக்கு வசதிகள்

### அமைச்சர் பெஸ்டஸ் நடவடிக்கை

கொழும்பு, ஏப் 18

இடமாற்றம பெறும அரச ஊழியர்களுக்கு அவ்வப் பகுதிகளில் உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும-

பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா இதற்கான முடிவை எடுத்துள்ளார்-

அரசாங்க ஊழியர்கள் இடமாற்றம பெறும போது கொழும்பு மாவட்டத்துக்கே மாற்றம பெற விரும்புகின்றனர்- கொழும்பில் சகல வசதிகளும் கிடைப்பதே இதற்குக் காரணமாகும-

இதனால் அரசாங்க ஊழியர்கள் புதிதாக இடமாற்றம பெற்றுச் செல்லும பகுதிகளில் அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சு தீர்மானித்துள்ளது-

இத் திட்டத்தினால் அரசாங்க ஊழியர் திருப்தியுடன் தமது கடமைகளை செய்யவும வாய்ப்பேற்படும என்று அமைச்சர் திரு

(2ஆம பக்கம பார்க்க)

## சோமண்ணை



சனி மாற்றம கள்ளச்சாராயக் காரர்களுக்கும நல்லாயில்லை பாருங்கோ- பல பேர் பிடிபடுகினம-

## துன்பங்கள் சித்திரவதைகளின் போதும் மக்களிடமிருந்து விடுதலை: உணர்வை பிரிக்க முடியவில்லை

### நிலாவெளி கூட்டத்தில் மாத்தயா

திருகோணமலை ஏப் 17

கடந்த போராட்ட காலங்களில் மக்கள் பல துன்பங்களையும சித்திரவதைகளையும அனுபவித்தார்கள், இருந்த போதும விடுதலை உணர்வை அவர்களிடமிருந்து பிரிக்க முடியவில்லை:

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு மகேந்திரராஜா (மாத்தயா) இப்படிக் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டமொன்று நேற்று முன்தினம (17 ஆம திகதி) மாலை நிலாவெளி இக்பால் நகரத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஜனாப் முகம்மது கச்சி முகம்மது தலைமை வகித்தார்.

திரு மாத்தயா அதில கலந்து கொண்டு மேலும பேசுகையில் கூறியதாவது-

வடக்கு கிழக்கு மக்களைப்

(2ஆம பக்கம பார்க்க)

## மின் தாக்கி சட்டத்தரணி பலி

கொழும்பு ஏப் 18

இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களில் ஒருவரான சட்டத்தரணி தயானந்த சமரசிங்க மின்சாரம தாக்கி மரணமானார்-

பிலியந்தலை,, கனியட்மஹர பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்தே இந்த அனர்த்தம நேர்ந்துள்ளது-

இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்-

இவரது இறுதிச் சடங்குகள் இன்று (19ஆம திகதி) மாலை எருவ்வல பொது மயானத்தில் நடைபெறும- (ல-வ)

## நகைக் கடையில் கொள்ளையடித்த முன். இராணுவ வீரர் கைது

கொழும்பு, ஏப் 18

நகைக்கடை ஒன்றில் கொள்ளையிட்ட முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்-

இச் சம்பவம நேற்று முன்தினம கொழும்பு, கொட்டாஞ்சேனையில் நடந்தது-

சம்பவதினம இராணுவ சீருடையுடன் நகைக்கடைக்குள் சென்ற இந்த நபர் முகாமையாளரிடம பணம தருமபடி அச்சுறுத்தினார்-

முகாமையாளர் பணம தர மறுத்தார்- அவரை அச்சுறுத்தி 10 ஆயிரம ரூபா பணத்தை திருடிக் கொண்டு ஆட்டோ ஒன்றில் தப்பிச் சென்றார்-

தகவல் கிடைத்த பொலீஸார் சிறித நேரத்தின் பின்னர் சந்தேக நபரை மடக்கிப் பிடித்தனர்-

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் தேடப்பட்டு வருகின்றனர்-

[ல—கு]

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

வாழைச்சேனை, காத்தான்குடி

# மறுசீரமைப்பு கொடுப்பனவுகள்

## வடக்கு கிழக்கு மறுவாழ்வு குழு விரைவில் வழங்க உறுதி

கொழும்பு, ஏப் 18

வாழைச்சேனை ஏறாவூர் காத்தான்குடி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு, மறுசீரமைப்புக் கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படும்—

வடக்கு கிழக்கு மறுவாழ்வு, மறுசீரமைப்புக் குழு இதற்கான உறுதிமொழியை அளித்துள்ளது—

மறுவாழ்வு, மறுசீரமைப்புக் கொடுப்பனவுகளை விரைவில் வழங்குமாறு வடக்கு கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப் எம் பி முகைதீன் அப்துல் காதர் வேண்டுகோள் விடுத்திருந்தார்—

இவரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தக் குழு இந்த விடயத்தை ஆராய்ந்தது—

அதன் பின்னர் ஜனாப் அப்துல் காதரிடம் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது—

இந்தக் கொடுப்பனவுகளை துரிதப்படுத்துமாறு மட்டக்க மாவட்ட மறுவாழ்வு, மறுசீரமைப்பு பணிப்பாளர் குழுவினால் பணிக்கப்பட்டுள்ளதாக ஜனாப் அப்துல் காதர் தெரிவித்தார்—

[இ—ற]

## மே தின ஊர்வலங்களில் பாடசாலை வாத்திய குழு இடம்பெறக் கூடாது

### ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஏப் 18

மேதின ஊர்வலங்களின் போது பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுவினரை சேர்த்துக் கொள்ளக் கூடாது—

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்—

நாட்டின் சகல தொழிற் சங்கங்களுக்கும் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது—

ஐ தே க மேதின ஊர்வலம் மிகவும் அமைதியான முறையிலும் கட்டுப்பாட்டுடனும் இம்முறை நடைபெறும்—

"தொழிலாளர்களை கிளர்ந்தெழச் செய்யாமல் அவர்களை ஐக்கியப்படுத்துவதே" ஐ தே க வின் மேதின கோஷமாக இருக்கும்—

ஐ தே க மேதின ஊர்வலம் சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பித்து காலிமுகத்திடலில் வந்தடையும்—

[இ—ழ]

## பதில் சட்டமா அதிபர் நியமனம்

கொழும்பு, ஏப் 18

சொலிசிட்டர் ஜெனரல் திரு எஸ் டபிள்யூ வடுகொடபிட்டிய பதில் சட்டமா அதிபராக ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவினால் நியமிக்கப்பட்டுள்ளார்—

சட்டமா அதிபர் திரு சுனில் டி சில்வா நியூசிலாந்து சென்றிருக்கிறார்— அவர் நாடு திரும்பும் வரை பதில் சட்டமா அதிபராக திரு எஸ் டபிள்யூ வடுகொடபிட்டிய கடமையாற்றுவார்—

[இ—ழ]

## ரயில் விபத்தில் காயமடைந்தவர் மரணம்

கண்டி, ஏப் 17

பிலிமத்தலாவையில் நடந்த ரயில் விபத்தில் காயமடைந்த நால்வரில் ஒருவர் நேற்றுக் காலை கண்டி மருத்துவ மனையில் காலமானார்—

அனுராத டி சில்வா என்ற 19 வயது இளைஞரே காலமானவர்— இவர் அனுராதபுரத்தைச் சேர்ந்தவர்—

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த பொடிமெனிக்கே ரயில் நேற்று முன்தினம் மாலை பிலிமத்தலாவையில் தடம் புரண்டது—

ஆறு பயணிகள் பெட்டிகள் தடம்புரண்டதில் நால்வர் காயமடைந்தனர்— இவர்கள் கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்—

இந்த ரயில் விபத்தைத் தொடர்ந்து மலையக ரயில் சேவை சீர்குலைந்துள்ளது—

கொழும்பு — கண்டி ரயில் சேவை நேற்று கடுகண்ணாவை வரையே நடைபெற்றது—

இதேவேளை பதுளைக்கும் நாவலப்பிட்டிக்கும் இடையில் மாத்திரமே நேற்று ரயில் சேவைகள் இடம்பெற்றன—

இன்று ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது—

[ல—ங—வ—017]

## இளைஞருக்கு புலிகள் தண்டனை

மட்டக்களப்பு, ஏப் 17

கோயில் உண்டியல்களில் திருடியதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் மட்டக்களப்பு மணிக்கூட்டு கோபுரத்தில் நேற்றுக்காலை கட்டி வைக்கப்பட்டார்—

விடுதலைப் புலிகளினால் இந்தத் தண்டனை வழங்கப்பட்டது—

கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு பகுதியில் 14 கோயில்களில் இந்த இளைஞர் உண்டியல்களை உடைத்து திருடியிருப்பதாக புலிகளுக்கு அறிவிக்கப்பட்டது—

புலிகள் இளைஞரை சுற்றி வளைத்துப் பிடித்து இந்த பகிரங்கத் தண்டனையை விதித்தனர்—

[ல—கு—து]

## 5 நட்சத்திர ஹோட்டல்கள் இடையே வெசாக் பந்தல் போட்டி

கொழும்பு ஏப் 18

வெசாக் தினத்தை முன்னிட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில், 5 நட்சத்திர ஹோட்டல்களுக்கிடையே வெசாக் பந்தல் அலங்காரப் போட்டி ஒன்று நடத்தப்பட இருக்கிறது:

இத்தகவலை தகவல்துறை ராஜாங்க அமைச்சர் திரு ஏ ஜே ரணசிங்க தெரிவித்தார்.

தகவல்துறை அமைச்சும், உல்லாசப்பயணத்துறை அமைச்சும் தகவல் அமைச்சில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியது—

இந்த மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்.

உல்லாசப் பயணத்துறை, கிராமத் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் எஸ் தொண்டமான் மற்றும் உல்லாசப் பயணத்துறை உயர் அதிகாரிகள். வானொலி, தொலைக்காட்சி பொறுப்பாளர்கள், ஆகியோரும் மாநாட்டில் கலந்து கொண்டனர், இந்த மாநாட்டில் ராஜாங்க அமைச்சர் திரு ஏ ஜே. ரணசிங்கா மேலும்கூறியதாவது—

உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிக்க வேண்டிய அவசியம் நமக்கு இன்று ஏற்பட்டுள்ளது, பல நெருக்கடிகளின் பின்னர் நம்மை வளம்படுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வெசாக் காலத்தை சரியாகப் பயன்படுத்தலாம், அதற்கு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து உல்லாசப்பயண ஹோட்டல்களும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளன.

இதற்கமைய வெசாக் அலங்காரப் பந்தல் போட்டி ஒன்று நடத்தப்படும், இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் வெசாக் பந்தலுக்கு 25 ஆயிரம் ரூபாவும் 2ஆம் 3ஆம் 4ஆம் 5ஆம் இடங்களைப் பெறும் ஹோட்டல்களுக்கு முறையே 20 ஆயிரம் 15 ஆயிரம், 10 ஆயிரம் 5 ஆயிரம் ரூபாய் வீதமும் பரிசாக வழங்கப்படும்.

உல்லாசப் பயணத்துறை அமைச்சு ஒரு குழுவின் மூலம் சிறந்த வெசாக் பந்தலைத் தெரிவு செய்யும்,

இதே போன்று பக்திப் பாடல்கள் போட்டியும் நடை பெற இருக்கிறது, சிறந்த பக்திப் பாடலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவு செய்யும்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

(இ—கு)


இன்றைய திரைகளில்

புதவருட வெளியீடு!
ஜெஸிமா
[கிராண்ட்பாஸ்]
2—30, 6—00, 9—30
ரியோ
[கொம்பனித்தெரு]
(குளிரூட்டப்பட்டது)
10—00, 2—00, 6—00
வின்சர்
[யாழ்நகர்]
10—30, 2—30, 6—00
சுவர் இல்லாத சித்திரங்கள், புதிய வார்ப்புக்கள்
மௌனகீதங்கள் புகழ்
பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த
இது நம்ம ஆளு
[கலர்]

2 வது வாரம்
சமந்தா
(தெமட்டகொடை)
10—30, 2—30, 6—00, 9—00
கொன்கோட்
(தெஹிவளை)
10—30, 2—00, 6—00, 9—00
ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10—30, 2—30, 6—30
10 வருஷத்துக்கு முன்பு நடந்தது—சொல்லப்படுட ஒரு உண்மைக் கதை
ரஜனிகாந்த் — ராதிகா
ரகுவரன் — சித்ரா
பாண்டியன் — மூர்த்தி
நடித்த
சத்யா மூவிஸ்
ஊர்க்காவலன்
(கலர்)


## மக்களிடமிரு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயமுறுத்தி விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையில் ஓர் எதிர்ப்பை உருவாக்க சில தீய சக்திகள் எத்தனித்தன.

இருந்த போதும் அந்நியப் படையை இமமண்ணில் இருந்து விரட்டியடிக்க, விடுதலை வீரர்களுக்கு மக்கள் உதவினார்கள்; பங்களிப்புகளைச் செய்தார்கள்.

இன்று அனுபவிக்கும் வெற்றியானது எமது காத்திரமான போராட்டத்தில் முஸ்லிம் மக்கள் காட்டிய பங்களிப்பு என்பதனை மன மகிழ்வுடன் கூறிக் கொள்கிறேன், ; ; வர்கள் விடுதலைப் புலிகள் என்றும் அவர் கூறினார்.

தமிழ் முஸ்லிம் மக்களைக் கூறுபோடச் சூழ்ச்சிகள் நடக்கின்றன.

முஸ்லிம்கள், தமிழர்களோடு பாரம்பரியமாக ஒன்றிணைந்து வாழ்ந்து வருகிறார்கள், அவர்களைப் பிரித்து வைக்க முடியாது என்றும் திரு காசி ஆனந்தன் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாதர் அணித் தலைவி சுந்தரி பேசுகையில் கூறியதாவது,

எங்கள் சுதந்திரத்துக்காகப் போராடி வரும் வடக்கு வாழ வருகிறார்கள்.

திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் வடக்கு கிழக்கில் எவ்வளவோ பகுதிகளை இழந்துள்ளோம்.

கிழக்குப் பிரதேசத்தை வென்றெடுக்க முஸ்லிம், தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும்.

பெண்களின் பங்களிப்பு விடுதலைக்கு முக்கியமானது. பெண்கள் முழுமையாக தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

பெண்கள் தங்கள் அடிமைத் தளைகளை அறுத்து விடுதலைக்காக உழைக்க வேண்டும்.

இவ்வாறு சுந்தரி கூறினார்.

கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு ரூபனும் பேசினார்.

## கண்ணிவெடி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தச் சம்பவம் நடந்தது—

வயலுக்குச் சென்ற மங்களகம பகுதி விவசாயி ஒருவர் கடந்த 17ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் சுடத்தப்பட்

## உல்லாசபயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஏப் 18

தென் பகுதிக்குச் செல்லும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை இத் தினங்களில் அதிகரித்து வருகின்றது—

இப்பகுதியில் கடந்த காலங்களில் நிலவிய தீவிரவாத நடவடிக்கைகளினால் உல்லாசப் பிரயாணிகளின் வருகை பெருமளவு வீழ்ச்சியடைந்தது—

தற்போது நாடு முழுவதிலும் அமைதி நிலவுவதால் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது—

இதனால் உல்லாச ஹோட்டல் உரிமையாளர்களும் மற்றும் கைப்பணி பொருட்களின் உற்பத்தியாளர்களும் நல்ல வரு

மக்கள் கூட்டிய பங்களிப்பு என்பதனை மன மகிழ்வுடன் கூறிக் கொள்கிறேன்.

குறுகிய அரசியல் லாபத்துக்காக தமிழ் முஸ்லிம் மக்களை நிரந்தர எதிரிகளாக்க சிலர் சூழ்ச்சி செய்கிறார்கள்.

வடக்கு, கிழக்கில் முஸ்லிம் தமிழ் மக்கள் மிக நெருக்கமாக சேர்ந்து வாழ்கிறார்கள்.

இப்பிரதேசம் தமிழ் முஸ்லிம் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவரும் பிரதேசமாகும். இங்கு வாழும் மக்கள் எப்போதும் தோழமையுடனும், சகோதரத்துவமுடனும் வாழ வேண்டும்.

இப்படி வாழும் போதுதான் எமது விடுதலையை அர்த்தமுள்ள விடுதலையாக்கி விட முடியும்.

இன்றும் சரி எதிர்காலத்திலும் சரி இங்கு வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் சகோதரத்துவத்துடன் வாழ்ந்து சுயநிர்ணய உரிமையைப் பெற சுதந்திரத்தைப் பெற போராட வேண்டும்.

மக்களை பிரிக்க யாராவது சதி செய்தார்களானால் வரலாறு அவர்களுக்கு சரியான பாடத்தைப் புகட்டும்.

இவ்வாறு திரு மாத்தயா கூறினார்.

கூட்டத்தில் திரு காசி ஆனந்தன் பேசுகையில்,

நாம் நீண்ட விடுதலைப் போராட்ட வரலாற்றைக் கொண்டவர்கள், நாம் எமது உரிமைகளை அன்னியரது கையில் ஒப்படைக்கப் போவதில்லை, என்றார்.

எங்கள் விடுதலைப் போராட்டம் பல சமாதிகளையும் இரத்த ஆறுகளையும் கண்டிருக்கிறது.

சீலன், அன்பு ராஜன் திலீபன், மில்லர், நவீனன் போன்ற எத்தனையோ வீரர்களை நாம் நம் களத்திலே பலி கொடுத்து இந்த வீர வரலாற்றை நடத்தி வருகின்றோம்.

அந்நிய ஆதிக்கத்தை விரட்டி அடுத்த விடுதலைப் போராட்டத்தில் சரியான இலக்கணம் வகுத்த சுந்தரி பேசுகையில் கூறியதாவது,

எங்கள் சுதந்திரத்துக்காக போராடி வரும் கிழக்கு வாழ் மக்களை வடக்கில் இருந்து பிரித்துவிட சதித்திட்டம் தீட்டுகின்றார்கள்.

அவர்கள் தாம் கிழக்கில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று திட்டமிட்டு செயற்பட்டு

கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு ரூபனும் பேசினார்.

திருகோணமலை மாவட்ட இராணுவ பொறுப்பாளர் திரு, பதுமன். விக்கி, மகிழமாறன், ஜெயா ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(ல-ழ-287)

# அன்னை பூபதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

விழாவிற்கு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு கெஸ்ட்ரோ தலைமை வகிப்பார்.

ஏறாவூர் களுவாஞ்சிக்குடி வலையிறவு மாமாங்கம் ஆகிய இடங்களில் இருந்து ஆரம்பமாகும் பேரணி பிற்பகல் ஒரு மணிக்கு மட்டக்களப்பு வெபர் அரங்கினை வந்தடையும். மாலை 4 மணிக்கு பொதுக் கூட்டமும் இரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

விழாவிற்கு மட்டக்களப்பு மாவட்ட புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் விசு தலைமை தாங்குவார். பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள்.

இதே வேளை நேற்று மட்டக்களப்பு சர்வோதய நிலையம் சைக்கிளோட்டப் போட்டி ஒன்றை நடத்தியது.

மட்டக்களப்பில் இருந்து துறை நீலாவணை வரைக்கும் சைக்கிள் ஓட்ட வீரர்கள் சென்று, மீண்டும் மட்டக்களப்பு செண் மைக்கல் கல்லூரி மைதானத்தை வந்தடைந்தனர்.

நேற்று இரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

திருகோணமலையில் அன்னை பூபதியின் நினைவாக எழுச்சிப் பேரணி நடைபெறவதோடு இந்தியப் படையினர் செய்த அட்டூழியங்களை நினைவு கூரும் வகையில, அலங்கார ஊர்திகளின் பவனியும் இடம்பெற இருக்கின்றது.

இவ்வெழுச்சிப் பேரணி ஊர்வலமாக உப்புவெளி 3 ஆம் கட்டையில் ஆரம்பமாகி எம் சி வீதி, மத்திய வீதி, கடற்கரை வீதி, நீதிமன்ற சந்தி, திருஞான சம்பந்தர் வீதி ஆகியனவற்றின் ஊடாக சிவன் கோவிலடியை வந்து சேரும்.

(ல-மு-கு-287-து)

## கள்ளச் சாராய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) ஆகியவை கைப்பற்றப்பட்ட பொருட்களில் அடங்கும்.

நீர்கொழும்பு பொலீஸ் அத்தியட்சகர் மொரிஸ் டயஸின் பணிப்பின் பேரில் நீர்கொழும்பு உதவி பொலீஸ் அத்தியட்சகர் என் சி குடாஹெட்டி தலைமையிலான பொலீஸ் குழுவினர் இந்த வேட்டையை நடத்தினர்.

[ல-கூ]

## இடமாற்றம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்கும் மாகாண சபை ஊழியர்களுக்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்துவதும் இதன் மற்றொரு நோக்கமாகும் என்றும் அமைச்சர் சொன்னார்.

[ல-வ].

கடந்த 17ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார்.

இவரைத் தேடிச் சென்ற போதே மேற்படி இருவரும் கண்ணிவெடியில் சிக்கினர்.

படுகாயமடைந்த இராணுவ கோப்ரல் புஷ்பகுமார ரஞ்சித்தும், கிராமவாசி சுதுபண்டாவும் அம்பாறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ல-ர)

## உணவு விஷமாகி மாணித்தோர் எண்ணிக்கை 100க்கு மேல்

புதுடில்லி ஏப் 17

உத்தர பிரதேசத்தில் ராய்ப்பூரா ஜஸ்னா கிராமத்தில் திருமண வைபவம் ஒன்றில் பரிமாறப்பட்ட உணவு விஷமாகியதால் மரணமுற்றோர் எண்ணிக்கை 100க்கு மேல் அதிகரித்துள்ளன.

திருமணத்திற்கு வருகை தந்த 600 பேரில் சுமார் 350 பேர் மேற்படி உணவை அருந்தியிருக்கலாம் என்றும் எனவே மரணமுற்றோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் பத்திரிகை செய்தி ஒன்று கூறுகிறது.

[ந]

## கால நிலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) மழை பெய்துள்ளது.

எனினும் நீர்த்தேக்கப் பகுதிகளில் மழை பெய்யவில்லை என காலநிலை அவதான நிலைய பணிப்பாளர் திரு ஏ மொஹட்டால தெரிவித்தார்.

அதிக கூடுதலான மழைவீழ்ச்சி இருந்த இடங்கள் இரத்மலானை 124 மி மீ கட்டுநாயக்க 62 மி மீ கொழும்பு 32 மி மீ.

[ல-ர]

வடிக்கைகளினால் உல்லாசப் பிரயாணிகளின் வருகை பெருமளவு வீழ்ச்சியடைந்தது.

ஆனால் தற்சமயம் இதன் பகு

## இராணுவ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) தாக பொலீஸார் தெரிவித்தனர்.

மேற்படி கோப்ரலுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கையாக இடமாற்றம் வழங்கியமையே அவரின் ஆத்திரத்துக்குக் காரணம்.

சம்பவதினம் இறந்தவரும் ஆத்திரம் கொண்ட இராணுவ கோப்ரலும் புதுவருட கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு விட்டு இரவு உணவிற்குச் சென்றனர். சற்று நேரத்திற்குப் பின்னர் சார்ஜண்ட் மேஜரின் அறைக்குள் நுழைந்த லான்ஸ் கோப்ரல் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

மீண்டும் அதிகாரிகள் அறைக்குள் நுழைந்த லான்ஸ் கோப்ரல் தமது சகபாடி ஒருவரை கொலை செய்யப் போவதாக மிரட்டினார். எனினும் வேறு இராணுவ வீரர்கள் அவ்விடத்திற்கு விரைந்து லான்ஸ் கோப்ரலை மடக்கிப் பிடித்தனர்.

இராணுவ வீரர்கள் சம்பவம் பற்றி உயர் அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கு முன்னதாக லான்ஸ் கோப்ரல் அந்த முகாமை விட்டு தப்பி ஓடி விட்டார்.

புலன் விசாரணைகள் தொடர்கின்றன.

(ல-நூ)

## ஜீ. சி. ஈ...!

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) தமது விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்று பரீட்சை ஆணையாளர் திரு ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதம் 14ஆம் திகதி வரை மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் ஆகையால் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை முன்கூட்டியே அனுப்பி வைக்க வேண்டும் என்றும் திரு வெதமுல்ல தெரிவித்தார்.

[ல-வ]

டல் உரிமையாளர்களும் மற்றும் கைப்பணி பொருட்களின் உற்பத்தியாளர்களும் நல்ல வருமானத்தைப் பெற்று வருகின்றனர்.

இந்த வேளை கடந்த காலங்களில் மூடப்பட்டிருந்த பல ஹோட்டல்களும் இத் தினங்களில் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன.

அவற்றை விரைவில் திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[இ-வ]

## யாழ் நகரில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு வி பி பாலசிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது—

இத்திட்டம் 1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் சூழ்நிலைகள் காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது. இப்பொழுது இத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இரு கட்டமாக செயல்படுத்தப்படும்.

முதலாம் கட்டமாக நிலாவெளியில் இருந்து யாழ்ப்பாணம் வரை குழாய்கள் பதிக்கும் பணிகள் இடம்பெறும். இதற்கென 30 லட்சம் ரூபா செலவிடப்படும்.

இரண்டாம் கட்ட வேலைக்கு 50 லட்சம் ரூபா செலவாகும். தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கான பாரிய நீர்த்தாங்கிகள், தரு நெல்வேலியில் ஒன்றும் நல்லூரில் ஒன்றுமாக கட்டப்படும்.

ஏற்கனவே மாவட்ட அபிவிருத்தி சபை மூலம் 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கீடு முதலாம் கட்ட செலவுகளுக்கு பயன்படுத்தப்படும்.

இந்த வேலைகள் முடிவடைந்ததும் யாழ்ப்பாணத்திற்கான தண்ணீர் பிரச்சினை முழுமையாக தீர்ந்து விடும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

[ல-கு-120]


ஊர்க்காவலன்

(கலர்)

12 வது வாரம்

விடோ

(யாழ்நகர்)

10-30, 2-30, 6-30

விஜயா

(மட்டுநகர்)

2-30, 6-30, 9-30

பிரபு அமலா

சிறுவன் மீனராஜ் நடித்த

பூ...

பூவா

பூத்திருக்கு

(கலர்)

19 வது வாரம்

ராஜா

(யாழ்நகர்)

10-30 2-30 6-00

சாந்தி

(மட்டுநகர்)

2-30 6-30 9-30

ரஜனிகாந்த்

(இரட்டை வேடம்)

ராதா நதியா

நடித்த

ராஜாதி ராஜா

(கலர்)

20 வது வாரம்

இன்று மட்டும்!

வெலிங்டன்

(யாழ்நகர்)

10-30 2-30 6-00

கார்த்திக் – ஜெய், வி கே ராமசாமி

நடித்த

வருஷம் 16

(கலர்)

## கற்பிட்டி கடற் பகுதியில் இழுவை படகு மூலம் கடல் அட்டை சங்கு பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குக

புத்தளம், ஏப் 17

"கற்பிட்டி கடற் பிரதேசத்தில் இழுவைப் படகுகள் மூலம் கடல் அட்டைகள், சங்குகள் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்பட வேண்டும்—

இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்றை வட மேல் மாகாண சபையில் விவாதிக்க முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது—

நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இந்தத் தடையினால் வேலையிழந்துள்ளனர்— பல லட்சம் ரூபா அந்நியச் செலாவணியும் இதனால் இழக்கப்படுகிறது என்று அந்த முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது—

வட மேல் மாகாண சபையின் மாதாந்த அமர்வு இம் மாத மத்தியில் நடைபெறவுள்ளது—

அந்த அமர்வின் போது விவாதிப்பதற்காக வட மேல் மாகாண சபையின் புத்தளம் பிரதிநிதி டாக்டர் ஐ எம் இல்யாஸ் (ஸ்ரீ ல மு கா) இந்த முன்னறிவித்தலை கொடுத்துள்ளார்—

இந்த முன்னறிவிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது—

"கற்பிட்டி கடற் பிரதேசத்தில் இழுவைப் படகுகள் மூலம் கடல் அட்டை, சங்கு போன்றவை பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது— அனால் இறால், மீன் முதலியன பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது—

இது எந்த வகையிலும் நியாயமாகாது—

தேசிய நீரியல் வள முகாமை சபையின் அறிக்கையின்படி இழுவைப் படகு மூலம் கடல் அட்டை, சங்கு என்பன பிடிப்பதால் நீர்வளமும், நீரியல் செல்வமும் அழிந்து விடும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது—

இதே வேளை இறாலும், மீனும் பிடிப்பதால் நீர்வளம் அழிந்து விடாது என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது—

பெரிய இலை கொண்ட வலைகள் கொண்டு கடல் அட்டையும், சங்கும் பிடிப்பதால் ஒருக்காலும் கடல் வளம் அழிந்து விடாது— மாறாக சிறிய இலை கொண்ட வலைகள் மூலம் இறாலும், மீனும் பிடிப்பதால் தான் கடல் வளம் பாதிப்படையும்—

இந்தத் தடையை உடனடியாக நீக்கி நூற்றுக்கணக்கான மீனவர்களுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கவும் நாட்டுக்கு லட்சக் கணக்கான அந்நியச் செலாவணி கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்—

இப்படி அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது—

[ல—241]

## நகர சுத்திகரிப்பு பிரசாரவாரம் மே 30 இல்

### சுற்றாடல் துறை அமைச்சு நடவடிக்கை

கொழும்பு ஏப் 17

நகர சுத்திகரிப்பு பிரசார வாரம் ஒன்றை சுற்றாடல் துறை அமைச்சு நடத்த இருக்கிறது— எதிர்வரும் மே 30 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்த சுத்திகரிப்பு வாரத்தில் அரசு, மற்றும் தனியார் துறை நிறுவனங்களும் பங்கு கொள்ளவிருக்கின்றன—

இந்த தகவலை சுற்றாடல் சார்ந்த இராஜாங்க அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்க வெளியிட்டார்—

செத்ஸ்ரீ பாயாவில் அண்மையில் நடந்த கூட்டமொன்றில் அமைச்சர் உரையாற்றிய போது மேலும் தெரிவித்ததாவது—

இந்த விசேஷ வாரத்தின் போது ஏற்பாட்டாளர்கள் வீதி வீதியாக சென்று நகரத்தையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருப்பது எப்படி என்பது குறித்து மக்களுக்கு எடுத்துரைப்பார்கள்—

ஆரம்ப நடவடிக்கையாக குப்பையும் அசுத்தமும் அதிகமாக உள்ள கொழும்பு நகர வீதி ஒன்று தெரிவு செய்யப்பட்டு சுத்திகரிப்பு வேலை மேற்கொள்ளப்படும்—

பரீட்சார்த்த நடவடிக்கையின் அநுகூலங்களைப் பொறுத்து இந்த நடவடிக்கை நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் படிப்படியாக விஸ்தரிக்கப்படும்—

வீடுகள், உணவு விடுதிகள்— சந்தைகள்— சாப்பிடும் இடங்கள் கட்டிடப் பொருட்கள் போன்றவற்றிலிருந்து ஏற்படும் கழிவுகள் பெரும்பாலும் வீதி ஓரங்களிலேயே கொட்டப்படுகின்றன— இவை காலதாமதமின்றி அகற்றப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்—

இவ்வாறு அமைச்சர் சொன்னார்—

(லங்கா)

## அரசாங்க அறிவித்தல்

# ஹஜ் யாத்திரை—1990

இவ்வருடம் ஹஜ் யாத்திரை குழுக்களை அழைத்துச் செல்வதற்காக பின்வரும் முகவர் நிலையங்கள் (ஏஜன்ஸீஸ்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத் தருகிறேன்-

| முகவர் நிலையங்களின் பெயரும் விலாசமும் | அறவிடப்படும் முழுச் செலவுத் தொகை (விமானக் கட்டணமும் குர்பானும் தவிர்ந்த) | மக்காவில் ஹரம சரீபுக்கும் தங்குமிடத்திற்கும் இடையிலான சுமாரான தூரம் மீட்டரில் |
|---|---|---|
| 01 அம்மன் டிரவல்ஸ் 22 1/2, இரண்டாம் மாடி, பிரின்ஸ் வீதி, கொழும்பு (11) | ரூ 48,059 | 100—150 |
| 02 அல் அமல் டிரவல்ஸ், 140, 1 ஆம் மாடி, முன் வீதி, கொழும்பு (11) | ரூ 40,194 | 50 |
| 03 அரபாத் டிரவல் ஏஜன்சி, 18 1/03, பிளவர் ரோட், கொழும்பு (07) | ரூ 42,284 | 150 |
| 04 சிபுரோ டிரவல்ஸ் லிமிடட், 94 2/7, யோர்க் வீதி, கொழும்பு (01) | ரூ 35,530 | 75 |
| 05 சொயிஸ் டிரவல், 114/7, டபிள்யூ ஏ சில்வா மாவத்தை, கொழும்பு (06) | ரூ 41,734 | 150 |
| 06 அய்லன்ட் டிரவல்ஸ், 156 1/3, மாத்தளை ரோட், அக்குறணை | ரூ 40,634 | 150 |
| 07 ஜபர்ஜி டிரவல்ஸ், 279, சேர் இரத்தினசோதி சரவணமுத்து மாவத்தை, கொழும்பு (13) | ரூ 48,774 | 50 |
| 08 தாரா டிரவல்ஸ் அண்ட் டுவர்ஸ், 66, விவேகானந்த மேடு, கொழும்பு (13) | ரூ 41,500 | 100 |
| 09 ஹைராஸ் இன்டர்நஷனல் டிரவல்ஸ், அண்ட் டுவர்ஸ், 253 ஏ, முதல் மாடி, ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை | ரூ 38,709 | 300 |

| முகவர் நிலையங்களின் பெயரும் விலாசமும் | அறவிடப்படும் முழுச் செலவுத் தொகை (விமானக் கட்டணமும் குர்பானும் தவிர்ந்த) | மக்காவில் ஹரம சரீபுக்கும் தங்குமிடத்திற்கும் இடையிலான சுமாரான தூரம் மீட்டரில் |
|---|---|---|
| 22 சருக்ஸ் டிரவல் சர்விஸ் (சிலோன்) லிமிடட், 3-ஏ, யோர்க் வீதி, கொழும்பு (01) | ரூ 45,034 | 150 |
| 23 அனஸ் டுவர்ஸ் அண்ட் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிடட், 33, 34, பீபல்ஸ் பார்க் கொம்ப்லெக்ஸ், 1 ஆம் மாடி, போதிராஜா மாவத்தை, கொழும்பு (11) | ரூ 37,609 | 75 |
| 24 அர்சாட் டிரவல் சர்விஸ், 91, புதிய சோனகத் தெரு, கொழும்பு (12) | ரூ 34,144 | 75 |
| 25 அல்—ஹரமய்ன் டிரவல்ஸ் அண்ட் டுவர்ஸ், 90, 1 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு (11) | ரூ 38,709 | 200 |
| 26 பி என் எப் டிரவல்ஸ் அண்ட் டுவர்ஸ், 58, பீபல்ஸ் பார்க், காஸ்வர்க் வீதி, கொழும்பு (11) | ரூ 39,934 | 200 |
| 27 எப் எஸ் எப் டிரவல்ஸ், 476 டி/8, முதல் மாடி, மருதானை சொப்பிங் கொம்ப்லெக்ஸ், கொழும்பு (10) | ரூ 31779 | 100 |
| 28 பூஜீ டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிடட், 81, தானி வீதி, கொழும்பு (04) | ரூ 37,884 | 250 |
| 29 கோல்ட் ஸ்டார் டுவர்ஸ் அண்ட் டிரவல்ஸ், 553, 3 ஆம் மாடி, கொழும்பு மத்திய சுப்பர் மார்கட், கொழும்பு (11) | ரூ 39,919 | 250 |
| 30 [illegible] | | |

## மத்திய மா. சபை தொடர் கூட்டம் 24 இல்

கண்டி ஏப் 17

மத்திய மாகாண சபையின்

## 24 இல்

கண்டி ஏப் 17

மத்திய மாகாண சபையின் இரண்டாவது தொடர் கூட்டம வைபவ ரீதியாக எதிர் வரும 24 ஆம திகதி ஆரம பித்து வைக்கப்படும.

மத்திய மாகாண ஆளுநர் திரு பீ ஸி இமபுலான இந்த வைபவத்தில் கலந்து கொண்டு பேசுவார்.

கண்டி குயீன்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் இந்த வைபவம முற்பகல் 10 மணிக்கு இடம பெறும- (ல-017)

## ஐ. சோ. மு. மே தின கூட்டம்

ஐக்கிய சோஷலிஸ முன் னணியின் மேதின கூட்டத் திற்கு ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்க தலைமை வகிப்பார்-

மேற்படி முன்னணி இதற் கான முடிவை எடுத்திருக்கிறது- முன்னணியின் மேதினக் கூட்டம கொழும்பு ஹெவ்லொக் மைதானத்தில் நடைபெறும லங்கா சமசமாஜக் கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நவசமசமாஜக் கட்சி ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் "வி" பிரிவு என்பன இக்கூட்டத்தில் பங்கு பற்றும்-

இத்தவேளை ஐக்கிய சோஷலிஷ முன்னணியில் அங்கம வகிக் கும திரு ஓஸி அபேகுணசேகர தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒரு குழு வினர் முன்னணியின் மேதினக் கூட்டத்தில் பங்குபற்றாது தனி யாக மேதினக் கூட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளனர், [நு-வ].

| | | |
|---|---|---|
| 09 ஹைராஸ் இன்டர்நஷனல் டிரவல்ஸ், அன்ட் டுவர்ஸ், 253 ஏ, முதல் மாடி, ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை, கொழும்பு (13) | ரூ 38,709 | 300 |
| 10 மதினா நாரி டிரவல்ஸ், 29, 2 ஆம மாடி, 3 ஆம குறுக்குத் தெரு, கொழும்பு (11) | ரூ 35,266 | 150 |
| 11 மக்கா டிரவல்ஸ் சர்விஸ், 385, காலி வீதி, கொழும்பு (6) | ரூ 34,034 | 100 |
| 12 மால்ஷிப் டிரவல்ஸ் லிமிடட், 80, நெத்லமெஷின் ரோட், கொழும்பு (11) | ரூ 42,824 | 150 |
| 13 மிட்லண்ட் டிரவல்ஸ் சர்விஸ், 45, மலிபன் வீதி, கொழும்பு (11) | ரூ 42,119 | 100 |
| 14 நஜா அன்ட் பாரூக் டிரவல்ஸ், 7, காலிமுகத் டெறஸ், கொழும்பு (3) | ரூ 46,084 | 100 |
| 15 கேப்வே டிரவல்ஸ் அன்ட் டுவர்ஸ், 185, பழைய சோனகத் தெரு, கொழும்பு (11) | ரூ 40,044 | 100 |
| 16 சபயர் புஷ்ரா, 25, மாக்கான் மார்கார் ஆர்கேட், கொழும்பு (3) | ரூ 43,725 | 150 |
| 17 சமஸ் அன்ட் சன்ஸ் (டிரவல்ஸ்) லிமிடட், 33, ஏ குயின்ஸ் ரோட், கொழும்பு (3) | ரூ 46,704 | 75 — 100 |
| 18 டிரவல்ஸ் எக்ஸ்சேஞ், 47/1, 2 ஆம குறுக்குத் தெரு, கொழும்பு (11) | ரூ 53,130 | 80 |
| 19 டிரவல்ஸ் எக்ஸ்பிரஸ், 120 2/1, பாங்சால வீதி, கொழும்பு (11) | ரூ 36,014 | 150 |
| 20 வொண்டர்ஸ் டிரவல் சர்விஸ், 19, உஸைனியா வீதி, கொழும்பு (12) | ரூ 37,719 | 150 |
| 21 யாத்ராமா டுவர்ஸ் அன்ட் டிரவல்ஸ், பிரைவேட் லிமிடட், 142/1, காலி வீதி, கொழும்பு (3) | ரூ 41,569 | 150 |
| ... கொழும்பு (11) | | |
| 30 ஹிஜ்ரா டிரவல்ஸ், 109, மிகிந்த மாவத்தை, கொழும்பு (12) | ரூ 38,104 | 150 |
| 31 இக்ரா டிரவல்ஸ், 102 1/4, பிரின்ஸ் வீதி, கொழும்பு (11) | ரூ 40,590 | 100 |
| 32 மதினா ஹஜ் பிலிகிரிமஸ், 3/13, பின்வத்தை ரோட், தெஹிவளை | ரூ 36,619 | 90 |
| 33 மௌலானா டிரவல்ஸ், 18, இரக்சபான, மல்வானை | ரூ 35,739 | 200 |
| 34 ரிபாஸ் டிரவல்ஸ் அன்ட் டுவர்ஸ், 6, டியூக் வீதி, கொழும்பு (01) | ரூ 36,014 | 150 |
| 35 ரிஸ்மி டிரவல் ஏஜன்சிஸ், 242, 1/3, காலி வீதி, கொழும்பு (06) | ரூ 32,219 | 100 |
| 36 சப்பா டிரவல்ஸ், 124/1, பெல்மண்ட் வீதி, கொழும்பு (12) | ரூ 40,304 | 100—150 |
| 37 உமமுல் குரா டிரவல்ஸ், 143, கிரேண்ட்பாஸ் ரோட், கொழும்பு (14) | ரூ 40.909 | 100 |
| 38, சப்ரா ஹஜ் குரூப், 91/5, சத்தாம வீதி, கொழும்பு (01) | ரூ 41,414 | 250 |
| 39 ஏ ஏ முகமமத் அன்ட் கமபனி லிமிடட், 173 1/2, 2 ஆம குறுக்குத் தெரு, கொழும்பு (11) | ரூ 43,274 | 200 |

மேற்கூறப்பட்ட செலவுத் தொகையில் விமானக் கட்டணமும குர்பானும உள்ளடங்காது- ஹஜ் சேவைகள் வரி, போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதி, மௌலவி—உதவியாளர் சேவை, மினாவில் கூடாரங்களுக்கு குளிரூட்டி வசதி, நடாத்துநர் செலவு என்பன இதில் அடங்கும- விமானக் கட்டணம விரைவில் அறிவிக்கப்படும-

ஒவ்வொரு ஏஜன்சிக்கும எதிராகக் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக எத் தொகையையும செலுத்தக் கூடாது என்று ஹஜ்ஜாஜிகளை வேண்டுகிறோம-

எஸ் எச் எம ஜமீல்
செயலாளர்,

முஸ்லிம சமய பண்பாட்டு அலுவல்கள்
இராஜாங்க அமைச்சர் அலுவலகம,
மலாய் வீதி, கொழும்பு-2-
1990 ஏப்ரல்

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு-
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

சுடர் 18 கதிர் 4462
— 1990 ஏப்ரல் 19 —

# சர்வ வியாபக தன்மை கொண்டவன் இறைவன்

## அதனை அறியாததால் தான் மனிதன் பாவத்தை செய்கிறான்

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா

[தமிழாக்கம்- பொன் கனகராசா]

இறைவனில் நம்பிக்கை இல்லாதவர் குருடராவர்- ஏனெனில் மனிதன் நம்பிக்கை என்ற கண்களால் தெய்வீகத்தைக் காண்கிறான்- நம்பிக்கையில்லாதவனுக்கு இறைவன் இருப்பதாகத் தெரிவதில்லை-

இறைவனுடன் இறைவனின் ஆணை பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளது-

ஒருவனுடைய பக்தி நம்பிக்கையீனத்திற்கு எதுவாகும்- ஏனெனில் இறைவனில் பக்தி உள்ளவனாகவும் இறைவன் ஆணைக்கு அடிபணியாதவனாகவும் மாறுபட்டிருப்பதால் இறைவனுக்கு ஆணைகளை அலட்சியம் செய்வ பக்தி செலுத்தியும், அவனுடையதும் பக்தியின் உண்மையான குணாதிசயங்களாக அமையா-

எல்லாம் வல்ல இறைவனில் நம்பிக்கையில்லாமல் உலகில் எதனையும் சாதித்துப் பெற முடியாது நமது பக்தியால் பெறும் நன்மைகள் அதன் உத்வேக அளவைப் பொறுத்திருக்கின்றன-

இறைவன் எல்லா ஜீவாத்மாக்களின் தொகுப்பேயாகும்- பிரபஞ்சத்கு உருவம் எல்லாத் தனிச் சரீரங்களையும் அடக்குவதாகும்-

பிரபஞ்ச மனம் எல்லாத் தனி மனிதரின் மனங்களுமாகும்- அப்படியாக இறைவனுக்கும் மனிதனுக்கும் முக்கியமாக ஒருமைப்பாடு உண்டு.

அத்தகைய தலைசிறந்த உண்மைகளுக்கும், தெய்வீகத் தன்மைகளுக்கும் மதிப்பளிக்கும் தனிநபர் எவரும் இறைவன் இருக்கவே முடியாது என்ற வாக்கியத்தை வெறுத்து ஒதுக்க வேண்டியதாகக் கருதுவர்-

இவ்வுண்மைத் தத்துவங்களில் சிறப்பியல்புகளை உணராத மூடரே இறைவனில் நம்பிக்கை அற்றவராக இருப்பர்-

செறிந்த படைப்பின் அடிப்படையாக அமைந்துள்ள பேரொளியான தோற்றத்தையும் இருப்பதொன்றை இல்லை என்று மறுப்பதாகும்-

அதேபோல இறை நம்பிக்கையில்லாதவர் "இறைவன் எங்கும் இருக்கவில்லை" என்று கூறுகின்றனர்-

அதனைக் கூர்ந்து கவனித்தால் முதலில் "இறைவன் இருக்கிறான்" என்பதை நிர்ணயித்து "எங்கும் இல்லை" என்று மறுக்கப்படுகின்றது- நிலையாக உள்ள உண்மையை நலிவுற்ற அசத்தியம் அதனை மறைக்கின்றது-

பரிசுத்தமானதும் தெய்வீகமானதுமான உள்ளுணர்வையும் மக்கள் மறக்கப் பார்க்கின்றார்கள்-

பிரபஞ்சத்தின் அடிப்படையான இறைவனை நிராகரிப்பதால் மனிதன் தனது தோற்றத்தையே மறக்கிறான்-

தெய்வ நம்பிக்கையின்மையின் அமைப்பைக் கூர்ந்து ஆராயுங்கால் "நாஸ்திக" என்னும் சொல் இரு பகுதிகளாகவுள்ளது-

அதாவது ந-அஸ்தி "ந" என்பது இல்லாமையை உணர்த்துவது- "நாஸ்தி" என்பது உண்மையாக

ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள அன்னியோன்னிய உறவு நிலையை விவரித்துக் கூற முடியாது-

அப்படியிருந்த பொழுதிலும் தன்னுள் உள்ள ஆணவத்திற்கே பலியாகி மனிதன் தனது செயல்கள் எல்லாவற்றிற்கும் தானே பொறுப்பாளி என்ற நிலையை உருவாக்கி விடுகின்றான்-


உண்மையில் எதனை எப்போது - எவ்விடத்தில் - எவரால் எச்சூழ்நிலையில் - எந்த அளவிற்கு வெற்றியோடு செயற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதை இறைவன் ஒருவனே நிர்ணயிக்கின்றான்-

இறைவனின் சர்வ வியாபகத் தன்மையை அறியாததனால் மனிதன் பாவத்தைச் செய்யக்கூடத் தயங்குவதில்லை-

மனிதன் இறைவனின் ஒரு பகுதியாவதால் அவன் எதனைச் செய்தாலும் - அந்தச் செயல் எந்த நேரமாகிலும், எந்த இடமாகிலும் - இறைவனின் கவனத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது-

காற் பெருவிரலில் ஊரும் எறும்பை மனிதன் எப்படி உடனே உணர்ந்து கொள்கிறானோ அதைப் போன்று இறைவன், உலகமே அவனுடைய சரீரமாதலால், மனிதன் செய்யும் எச்சிறு செயலையும் உடனுக்குடன் அறிந்து கொண்டே இருக்கின்றான்- (ம)

**சாயி அமிர்தம்**



பேரீச்சம்பழம் அன்பளிப்பு

## பாவனைக்கு உதவாத சீனி

நுகர்வோர் துறையினர் இறக்குமதி செய்த 5000 தொன் பழுப்பு நிறச் சீனி பழுதடைந்த பாவனைக்கு உதவாத நிலையில் இருக்கிறது என்று இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்திருக்கிறது.

இதையடுத்து இந்தச் சீனியை விற்பனைக்கு விடக்கூடாது என்று உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு வீரசிங்க மல்லிமாராச்சி தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

இது சம்பந்தமாக அமைச்சர் சீனி இறக்குமதியாளர்கள் சங்கத்தினரையும் வரவழைத்துப் பேசியிருக்கிறார்.

அமைச்சர் உடனுக்குடன் எடுத்த இந்த நடவடிக்கைகளுக்காக அவரைப் பாராட்ட வேண்டும்.

ஆயினும் என்ன. அமைச்சர் தடை உத்தரவு பிறப்பித்து விட்டதால் இந்தப் பழுதடைந்த சீனியின் விற்பனை முற்றாக நிறுத்தப்படும் என்று எதிர் பார்க்கலாமா?

தடை செய்யப்பட்ட சீனி எங்காவது விற்கப்படுகிறதா என்பதை உணவுப் பகுதியில் இதற்குப் பொறுப்பாக இருப்பவர்கள் கண்காணிக்க வேண்டும். அவர்களை வர்த்தகர்கள் மாமூல் பிரகாரம் தமது வலையில் வீழ்த்தி விட்டால் என்ன செய்வது?

தாம் அதிக லாபம் அடைவதற்கு எவ்வளவு பணத்தையும் செலவிட வர்த்தகர்கள் தயாராக இருக்கிறார்கள்.

அது ஒரு புறம். மறுபுறத்தில் பணிஸ், கேக் மற்றும் இனிப்புப் பதார்த்தங்களைத் தயாரிக்கும் பேக்கரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் நிறையச் சீனி தேவை.

ஜாம், கோடியல் வகைகளைத் தயாரிப்பவர்களும

## ரமழான் மாத சமய நிகழ்ச்சிகள்

கொழும்பு, ஏப். 18

பாணந்துறை, தொட்ட வத்தை நல்லதுல் அத்கியா

## இந்தோட்டை வீதி சீர்கேட்டால் மக்கள் அவதி

காலி, ஏப். 17

காலி நகரில் இருந்து 4 மைல் தொலைவில் அமைந்துள்ள இந்தோட்டை வட்டாரத்தில் — பெரும்பாலான தெருக்கள் நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் இருக்கின்றன.

பழுதடைந்துள்ள இவ்வீதிகள் வாகனப் போக்குவரத்துக்கு லாயக்கற்றவையாக உள்ளன.

குறிப்பாக மஹஹபுகலை வீதி, விதானகொடை வீதி, வக்வெல்ல வீதி என்பனவற்றில் குன்றும் - குழிகளும் நிறைந்துள்ளதால், மழை நாட்களில் சேறும் சகதியும் கலந்த நீர் தேங்குவதன் மூலம் பாதசாரிகள் தம் உடைகளை அழுக்காக்கிக் கொள்ளும் அவல நிலை அன்றாடம் ஏற்படுகிறது.

அமைச்சர்களும் - எம் பிக்களும் - அதிகாரிகளும் பெரும்பாலும் குன்றும் குழிகளும் இல்லாத நெடுஞ்சாலைகளிலேயே பயணம் செய்வது வழக்கமாகும்.

அதனால் தானோ என்னவோ இந்தோட்டை பிரதான சந்திக்கு அருகிலுள்ள "காலி - கொழும்பு" பிரதான வீதியைச் சிரமைக்க மேற்கொள்ளும் தீவிர செயற்பாடும் அக்கறையும், இந்தோட்டையின் உட்புறமாக அமைந்துள்ள கிராமியத் தெருக்களைத் திருத்துவதில் இல்லை.

பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள், எம் பிக்கள் உட்பட உயர் அதிகாரிகள், இந்தோட்டைக் கிராமத்தின் உட்பகுதிக்குள் ஒரு முறையாவது வந்து கண்ணோட்டமிட்டுப் பார்த்தால் பாதைகளின் அவலட்சணமும் மக்கள் படும் துயரமும் அவர்கட்குப் புரியவரும்!

பொது மக்கள் அனுபவிக்கும் அசௌகரியங்களை அந்த முக்கிய பிரமுகர்கள் அனுபவ ரீதியாக உணர்ந்த பின்னராவது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு செய்யும் அவலட்சண வீதிகளைப் புனரமைத்துப் பணிபுரிய முன் வருவார்களன்றோ!

இவ்வாறு பலரும் பிரஸ்தாபிக்கின்றனர். (ஐ-034)

## செய்தித் திரட்டு

### புலவர்மணி நினைவு விழா

ஏறாவூர், ஏப் 17

மட்டக்களப்பு கல்வித் திணைக்கள ஆதரவுடன் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணி மன்றம் புலவர்மணியின் மூச்சிப்பற்ற வெளியீட்டு விழாவையும் பண்டிதமணி கணபதிப் பிள்ளையின் நினைவு தின விழாவையும் எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் நடத்த தீர்மானித்துள்ளது-

இதேவேளை ஈழத்து எழுத்தாளர்களின் கண்காட்சி ஒன்றும் அங்கு இடம்பெறும் என அறிவிக்கப்படுகிறது- [ஐ—073]

### முஸ். காங்கிரஸ் மாநாடு

மடவளை, ஏப் 17

கண்டி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மாநாடு அண்மையில் நடைபெற்றது-

கண்டி சேர் ராசிக் பரீத் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்திற்கு மத்திய மாகாண சபை அங்கத்தவரும் சட்டத்தரணியுமான ஜனாப் எச் எம் பாருக் தலைமை வகித்தார்- [ஐ--431]

### நிதியுதவி

கல்முனை, ஏப் 17

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 2500 வீடுகள் அமைக்கும் வேலைத் திட்டத்திற்கு யூ எஸ் நிறுவனம் நிதியுதவி வழங்கி உதவவிருக்கிறது-

பிரஸ்தாப மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் 300 வீடுகள் என்ற அடிப்படையில் இவ்வாறு வீடுகள் அமைக்கப்படும் -

மாகாண சபையின் வீடமைப்பு திணைக்களத்தினூடாக ஒவ்வொரு வீடும் 15 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும்- [ஐ—281]

### மாணவர்களின் சிரமதானப் பணி

கல்முனை, ஏப் 17

கல்முனை ஸாஹிறாக் கல்லூரி மாணவர்கள் சாய்ந்தமருது ஆஸ்பத்திரியில் சிரமதானப் பணி ஒன்றை மேற்கொண்டனர்-

ஆஸ்பத்திரி சுற்றாடலை சுத்தம் செய்த இச் சிரமதானப் பணி

தயாரிக்கும் பேக்கறிகளுக்கும் நிறுவனங்களுக்கும் நிறையச் சீனி தேவை.

ஜாம், கோடியல் வகைகளைத் தயாரிப்பவர்களும் பெருமளவில் சீனியை உபயோகிக்கிறார்கள்.

5000 தொன் பழுதடைந்த சீனியில் எவ்வளவு சீனி திருட்டுத்தனமாக இந்த இனிப்புப் பண்டங்களைத் தயாரிப்பவர்களிடம் போய்ச் சேரும் என்று தெரியாது.

கசிப்பு என்று சொல்லப்படும் கள்ளச் சாராயம் தயாரிப்பதற்கும் சீனி பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

கொழும்பு நகரிலும் வெளியிடங்களிலும் சமீபத்தில் கள்ளச் சாராயக் குகைகள் பலவற்றை பொலீஸார் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

பாவனைக்கு உதவாத 5000 தொன் பழுப்புச் சீனியில் எத்தனை தொன் சீனி கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களின் கைக்கு போய்ச் சேரும் என்பதையும் சொல்ல முடியாது.

ஆகவே பழுதான உணவுப் பொருள்களின் விற்பனையைத் தடை செய்வதோடு விஷயம் முடிந்து விடாது.

பழுதான உணவுப் பொருள்கள் எந்த விதத்திலும் பொது மக்களுக்குப் போய் சேராமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு.

அதாவது அரசாங்கம் அந்தப் பொருள்களைக் கைப்பற்றி அழித்து விட வேண்டும்.

அப்படிச் செய்வதற்கு இப்போது சட்டத்தில் இடமில்லையானால் புதிதாக அதற்குச் சட்டத்தில் வசதி செய்ய வேண்டும்.

## சமய நிகழ்ச்சிகள்

கொழும்பு, ஏப். 18

பாணந்துறை, தொட்டவத்தை நல்லதுல் அத்தியா ஜும்மாப் பள்ளிவாசலில் புனித ரமழான் மாதம் முழுவதும் பல்வேறு சமய நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இப் பள்ளிவாசலில் ஆரம்ப காலந்தொட்டே புனித ரமழான் மாதத்தில் நோன்பு திறப்பதற்கான "இப்தார்" நிகழ்ச்சி, தராவீஹ் தொழுகை, திக்ர் மஜ்லிசை அடுத்து வழங்கப்படும் தேநீர் உபசாரம், ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிசுக்கான உபசாரம், ஸஹர் போசனம் என்பவற்றுக்கான ஏற்பாடுகள் போன்றனவும் சிரமமாக நடைபெற்று வருகின்றன. (ஐ—வ)

## தொ. தே. சங்க மேதின விழாவும் வெள்ளிவிழாவும்

அட்டன், ஏப். 17.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மேதின விழாவும் வெள்ளி விழாவும் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி அட்டன் நகரில் நடைபெறும்.

மலையகப் பாரம்பரிய கலைகளை பிரதிபலிக்கும் வகையில் ஊர்வலம் ஒன்றும் இதில் இடம்பெறும்.

தொழிலாளர் தேசிய சங்கம் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நடத்தும் முதலாவது மேதின விழா இதுவாகும். (ஐ-096)



## பேரீச்சம்பழம் அன்பளிப்பு

சவூதி மன்னர் பஹ்த் இப்னு அப்துல் அஸீஸால் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு புனித ரமழானை முன்னிட்டு வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்கள் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டன.

அம்பாறை ஜும்ஆப் பள்ளிவாசலில் இது தொடர்பாக நடைபெற்ற எளிமையான வைபவமொன்றில் வர்த்தக வியாபாரத்துறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் கல்முனை பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினரிடம் பேரீச்சம்பழப் பெட்டிகளை வழங்கிக் கொண்டிருக்கையில் எடுக்கப்பட்ட படத்தை மேலே காண்க.

முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச். எம் அஸ்வரும் படத்தின் மத்தியில் காணப்படுகிறார்.

[படம்- எம் ஏ பகுர்தீன்]

(ஐ-035)

## கடை வர்த்தகர்கள் அளவை மோசடி: பாவனையாளர் பாதிப்பு

கொழும்பு, ஏப். 18

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள கடை வர்த்தகர்கள் அளவை நிறுவைகளில் மோசடி செய்வதாகக் கூறப்படுகிறது. இதனால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மரக்கறி வகை, மளிகைச் சாமான்கள், மீன், இறைச்சி போன்ற பொருட்களிலும் புடைவை வகைகளிலும் இவ்வாறு மோசடிகள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

பொருள்களை நிறுக்கும் போது ஒரு சில வர்த்தகர்கள் அனுமதிப்பத்திரமற்ற தராசுகளைப் பயன்படுத்துகின்றனராம்.

தினசரி பொருட்களின் விலையும் அதிகரித்துச் செல்லும் இன்றைய கால கட்டத்தில் வர்த்தகர்களும் இவ்வாறு மோசடி செய்வதால் பாவனையாளர்களே மிகவும் வஞ்சிக்கப்படுகின்றனர்.

ஆகையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளவை, நிறுவையில் மோசடி செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாவனையாளர்கள் கோருகின்றனர்.

[ஐ—வ]

லாத நெடுஞ்சாலைகளிலேயே பயணம் செய்வது வழக்கமாகும்.

அதனால் தானோ என்னவோ கிந்தோட்டை பிரதான சந்திக்கு முன் வருவார்களன்றோ!

இவ்வாறு பலரும் பிரஸ்தாபிக்கின்றனர். (ஐ-034)

## புனித ரமழான் சிந்தனைகள்

ரமழான் மாதத்தில் பெறும் பயிற்சி அடுத்த ஆண்டு ரமழானுக்கு இடையில் ஓராண்டின் மீதியாகவுள்ள பதினொரு மாதங்களிலும் ஒருவரின் வாழ்க்கையில் கடைப்பிடிக்க (பின்பற்றப்பட) வேண்டியதாகும்!

அதாவது ஆசைகளைக் கட்டுப்படுத்தி அல்லாஹ் விதித்துள்ள எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றும் சக்தியைப் பெற வேண்டும் என்பதாகும்!

அல்லாஹ்வுக்கு உவப்பான நற்கருமங்களைச் செய்யவும் அவன் விரும்பாதவற்றில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கும் அயராது முயற்சிக்க வேண்டும்!

இதுதான் நோன்பின் முக்கிய நோக்கமாகும்!

நோன்பின் மூலம் முக்கியமாக மன வலிமையைப் பெறாதவர் வெறுமனே பசிக்கும் தாகத்துக்கும் விழிப்புக்கும் தம்மை ஆளாக்கிக் கொண்டவராவார்.

"நோன்பு நோற்பவர்களில் பசியையும் தாகத்தையும் அனுபவித்ததை விட வேறு எதையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் பலர் உள்ளனர்" என்று நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இதுபற்றி குர்ஆன், ஹதீஸ் ஆகிய மூலாதாரங்களில் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன!

"பயபக்தியை உங்களில் ஏற்படுத்துவதற்காகவே நோன்பு உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது" என்று அல்குர்ஆன் கூறுகிறது.

எனவே குர்ஆனையும் ஹதீஸையும் தெளிவுறக்கற்று அதன்படி எமது வாழ்வை அமைத்துக் கொள்ள நாம் திடசங்கற்பம் பூண வேண்டும்.

மனிதன் அவனது வாழ்வை எப்படி அமைக்க வேண்டும்?

இந்த வரம்பை மீறியதாக அவனது வாழ்வு அமையக் கூடாது என்பவற்றைப் பற்றி அல்லாஹுத்தஆலா மனித இனத்துக்கு அறிவித்தது, மனித இனத்துக்கே அருளிய "நிஃமத்து" [அருட்கொடை]களில் மாபெரும் நிஃமத்தும் இறுதிநாள் வரை மனித இனத்துக்கு வழிகாட்டியாகவும் திகழவுள்ளது அல் குர்ஆனாகும்!

இந்த அல்குர்ஆனை முதன் முதலில் அருள ஆரம்பித்தது இந்த மகத்தான ரமழான் மாதத்திலாகும்!

எனவே இந்த மாதத்தில் அல்குர்ஆனை நாம் அதிகமதிகம் ஓத வேண்டும்!

அதனை விளங்குவதற்கான முயற்சிகளை முடிந்தளவில் நாம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் எமது வாழ்வை அமைக்க முழு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்!

ஏனையோரையும் அதன்பால் அழைக்க வேண்டும்!

இந்தப் பாரிய பொறுப்பை அல்லாஹுத்தஆலாவின் திருப்தியை நாடிச் செய்ய முயற்சிப்போமாக!

இன்ஷா அல்லாஹ்!

— எம் கே எம் அஸ்வர்

கல்முனை, ஏப் 17

கல்முனை ஸாஹிறாக் கல்லூரி மாணவர்கள் சாய்ந்தமருது ஆஸ்பத்திரியில் சிரமதானப் பணி ஒன்றை மேற்கொண்டனர்.

ஆஸ்பத்திரி சுற்றாடலை சுத்தம் செய்த இச் சிரமதானப் பணி மக்களின் பாராட்டுதலைப் பெற்றது.

ஆஸ்பத்திரி நிர்வாகிகள் சிரமதானத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு சிற்றுண்டி கொடுத்து கௌரவித்தனர். (ஐ-281)

## ரூ. 200 கோடி நிதியுதவி

வெயாங்கொடை, ஏப் 17

கம்பஹாவில் நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 200 கோடி ரூபா நிதி உதவியை ஜப்பான் இலங்கைக்கு அளித்துள்ளது.

பிரஸ்தாப நிதியுதவியைப் பயன்படுத்தி கம்பஹா பளுகஹா ஓயா நீர்ப்பாசன வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் முன்னாள் ஜப்பானியத் தூதுவர் திரு ஹி[illegible] சிதா ஓகாவோ கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு டொனால்ட் திசாநாயக்கா விடுத்த கோரிக்கைக்கு அமையவே இந்த நிதியுதவியை ஜப்பான் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

[ஐ—320]

லிதுவேனியாவுக்கு

# எண்ணெய்-வாயு விநியோகம் தடை

## ரஷ்யாவின் நடவடிக்கைபற்றி அறிவிப்பு

மாஸ்கோ, ஏப். 18

**லிதுவேனியாவுக்குரிய எண்ணெய் மற்றும் வாயு விநியோகத்தை ரஷ்யா தடைப்படுத்தியிருப்பதாக லிதுவேனியா செவ்வாயன்று அறிவித்தது.**

லிதுவேனியா, மீது பொருளாதாரத் தடை கொண்டு வரப் போவதாக ரஷ்ய தலைவர் மிக்காயல் கொர்பச்சோவ் அச்சுறுத்தல் விடுத்திருந்தார். அந்த அச்சுறுத்தலை அவர் செயலில் காட்ட ஆரம்பித்து விட்டார்.

இவ்வாறு லிதுவேனிய பிரதமர் கஸிமெய்ரா புருன்ஸ்கீன் பத்திரிகையாளர் மாநாடொன்றில் கூறினார்.

லிதுவேனிய குடியரசில் உள்ள மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமான மசேய்காய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு விநியோகிக்கப்படும் எண்ணெய்யின் அளவு குறைக்கப்பட்டிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்ததாக அவர் தெரிவித்தார்.

எண்ணெய் குறைப்பு பற்றி செவ்வாய் அதிகாலையில் தந்தி மூலம அறிவிக்கப்பட்டதாகவும அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவின் வாயு விநியோகப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி இந்தத் தந்தியை அனுப்பியதாக மசேய்காய் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினர் கூறினர்.

லிதுவேனியாவின் அயல் நாடான பைலோ ரஷ்யாவிலிருந்தே ரஷ்யா வாயுவினைப் பெற்று லிதுவேனியாவுக்கு விநியோகிக்கின்றது.

### உலகச் செய்திகள்

லிதுவேனியா மீது ரஷ்யா பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வந்தால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எச்சரிக்கை செய்திருந்தார்.

லிதுவேனிய சுதந்திர பிரகடனத்துக்கெதிராக செயல்படும ரஷ்யா மீது அமெரிக்கா கடும நடவடிக்கை எடுக்க வேண்டும.

இவ்வாறு லிதுவேனிய ஜனாதிபதி வைடவ்டஸ் லாண்ட்ஸ் பேர்கிஸ் கூறினார். (எ)

## மாடியிலிருந்து பாய்ந்த நாயால் மூதாட்டி மரணம்

எசன் மேற்கு ஜெர்மனி, ஏப். 18

மூன்றாவது மாடியிலிருந்து தெருவை நோக்கி 40 கிலோ நிறையுள்ள நாய் ஒன்று பாய்ந்தது அவ்வேளையில் பாதையில் சென்ற 79 வயது மூதாட்டி ஒருவரின் தலை மேல் அந்த நாய் விழுந்ததால் அவர் உயிரிழந்தார்.

நாய் ஆபத்தின்றித் தப்பியது. மூதாட்டியின் தலையில் ஏற்பட்ட காயங்களால் அவர் உயிரிழந்தார். நாய் பாய்ந்த காரணத்தை கண்டறிய பொலீஸார் நடத்திய விசாரணைகள் பலனளிக்கவில்லை. (எ—ரி)

# இந்தியாவுடன் யுத்தம்: பாக். தவிர்க்க வேண்டும்

## முன்னாள் ஆயுதபடை தலைவர் ஆலோசனை

இஸ்லாமாபாத், ஏப். 18

இந்தியாவுடன் யுத்தம நடத்துவதை பாகிஸ்தான் தவிர்த்துக் கொள்ள வேண்டும.

இவ்வாறு ஆலோசனை தெரிவித்திருக்கிறார் பாகிஸ்தான் ஆயுதப் படைப் பிரிவின் முன்னாள் தலைவர் ஆயாஸ் அஹமட்கான்.

செவ்வாயன்று பிரசுரிக்கப்பட்ட செய்தியொன்றிலேயே அவர் இதுபற்றித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும தெரிவித்திருப்பதாவது:—

இந்தியாவின் படை பலம அதிக சக்திமிக்கது. பாகிஸ்தான் வசமிருக்கும விமானப்படைப் பிரிவினர் மற்றும இராணுவப் படைப் பிரிவினரை இந்தியாவுடன் ஒப்பிடும போது இந்திய படைபலம பாகிஸ்தானை விட இரண்டு, மூன்று மடங்கு அதிகமாக இருக்கிறது—

ஆயினும இந்தியா பாகிஸ்தானை அக்கிரமிக்க முயன்றால் பாகிஸ்தானின் மக்கள் இராணுவம அதனை எதிர்க்க தயார் நிலையில் இருத்தல் அவசியம.

ஒரு யுத்தத்தை எதிர்கொள்ளும காலம அண்மித்து விட்டது. இதற்கு தயாராக வேண்டிய நிலையில் நாம இருக்கிறோம.

இந்தியாவுக்கும பாகிஸ்தானுக்குமிடையில் யுத்தம மூண்டால் இந்திய கடற்படை இலகுவான முறையில் கராச்சியையும குவாசிம துறைமுகங்களையும கைப்பற்றி விடும.

இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார். (எ)

புதுடில்லி தீ விபத்துக்கள்

## விசாரணை நடத்த எம். பிக்கள் கோரிக்கை

புதுடில்லி, ஏப். 18

புதுடில்லியில் திங்களன்று ஆங்காங்கே ஐந்து இடங்களில் திடீர் தீ விபத்துக்கள் இடமபெற்றன. இந்த விபத்துக்கள் குறித்து விசாரணை நடத்துமாறு கேட்கப்பட்டிருக்கிறது—

அரசாங்க மற்றும எதிர்க் கட்சி எம பிக்கள் இக்கோரிக்கையை விடுத்திருக்கின்றனர்.

டில்லி தலைநகரில் அமைந்துள்ள நாட்டின் பிரதான மாநாட்டு மண்டப மத்திய நிலையத்திலும திங்கட்கிழமை தீ பற்றிக் கொண்டது.

பயங்கரமாகப் பரவிய தீ பின்னர் தீ அணைக்கும படையினரால் அணைக்கப்பட்டது. திடீர் தீ விபத்துக்களையடுத்து ஆங்காங்கே மூன்று குண்டு வெடிப்புகளும இடமபெற்றன—

இவை அரச விரோத சக்திகளின் செயல்களாக இருக்கலாமென எம பிக்கள் கூறுகின்றனர்.

இச் சமபவங்கள் அப்படிப்பட்டவை அல்ல என உள்துறை அமைச்சர் மட்டி மொகமட் சயீட் மறுத்திருக்கிறார்.

விசாரணை நடத்த கமிட்டி ஒன்று இப்போது அமைக்கபட்டிருக்கிறது— (எ)


## எலிஸபெத் டெய்லர் ஆஸ்பத்திரியில்

நியூயோர்க், ஏப். 18

பிரபல சினிமா நடிகை எலிஸபெத் டெய்லர் கடந்த ஒரு வாரமாக நியூயோர்க் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்.

தாம நியூமோனியாவால் பீடிக்கப் பட்டிருப்பதாகவும எயிட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டிருப்பதான வதந்திகளில் உண்மை இல்லையெனவும அவர் மறுத்திருக்கிறார். (எ)


# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.



## கௌதமாலா 12 தூதரகங்களை மூடிவிடும்

கௌதமாலா, ஏப். 18

கௌதமாலா 12 வெளி நாட்டுத் தூதரகங்களை மூடி விடும்.

பணச் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கமுடன் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக கௌதமாலா நேற்று அறிவித்தது.

பொலிவியா, டொமினிக்கன் குடியரசு, இந்தியா, மலேஷியா அல்ஜீரியா, பராகுவே, போர்த்துக்கல், சவூதி அரேபியா, சுவிட்சர்லாந்து, தென் கொரியா தாய்லாந்து, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளில் உள்ள தூதரகங்களே மூடப்படவுள்ளன.

[எ]

## ஆள்மாறாட்ட கொலை

ஸ்ரீநகர் இந்தியா, ஏப். 18

காஷ்மீர் பிரிவினைவாதக் கெரில்லாக்கள் தவறுதலாக பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கொலை செய்தனர்.

தம தலைவரின் கொலைக்கு இவரே காரணம என்று கெரில்லாக்கள் எண்ணியதால் இவர் படுகொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பொலீஸாராக மாறு வேடத்தில் சென்ற இரு கெரில்லாக்கள் ஒரு பொலீஸ் உத்தியோகத்தரின் கதவில் தட்டினர். கதவு திறந்தும அவர் வீட்டில் காவல் நின்ற கான்ஸ்டபிளை தவறுதலாகச் சுட்டு விட்டனர்.

அண்மையில் கெரில்லாத் தலைவர் அப்துல் ஹமீத் பொலீஸாரால் கொல்லப்பட்டது தெரிந்ததே. (எ-ரி)





விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம் .பஜாஜ் நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சமபாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம ஒன்றை வாங்குங்கள் சாரதி அனுமதிப பத்திரம கொண்டுள்ள 21 வயதிற்கு மேறபட்ட அனைவருக்கும பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம கடனுக வழங்கபபடும்

எனவே குறைந்தபடசம் உங்களுக்கு ரூ 35.000 செலவிட முடியுமானல் புத்தம புதிய பஜாஜ் வாகனம ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும கடனைத் திருபபிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கபபடும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.

சந்தை பாடசாலை .கோவில் உறவினர் இல்லம் .இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகக் சவாரி செய்யலாம்


இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள் நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமி**

60, ஹைடபார்க் கோர்னர்

கொழும்பு 2

தொலைபேசி 25701/2 422149 549480



**இப்பொழுது!**

ஒரே தடவையில் முழுப் பணத்தையும் செலுத்தி பஜாஜ் வாகனத்தை உடனடியாகவே பெறலாம்

# பஜாஜ் பயணம் கோடி பெறும்

# டீன்ஏஜ் இருக்கும் வரை

## நிரோஷா கவர்ச்சியாக நடிப்பாராம்

"அக்கா (ராதிகா) நடிகை என்பதால் உங்களுக்கும் இயல்பாகவே நடிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டிருக்கும். அந்த ஆசை எந்த சூழ்நிலையில் எப்படி உருவானது?

நடிகை நிரோஷாவை பேட்டி கண்ட பெண் நிருபர் ஒருவர் இப்படி கேட்டார். அதற்கு நிரோஷா

நடிகை ஆக வேண்டும் என்ற ஆசை எனக்குள் இருந்தாலும் அதற்காக முயற்சி எடுத்துக் கொள்ளாமல் சும்மா இருந்தேன். ஒரு நாள் தெலுங்குப் பட நூறாவது நாள் விழா ஒன்றில் அக்காவுடன் நான் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை டைரக்டர் தாசரி நாராயண ராவ் பார்த்திருக்கிறார். உடனே என்னை நடிக்க வைக்கும் எண்ணத்துடன் போனில் தொடர்பு கொண்டார். அக்கா என்னிடம் விஷயத்தை கூறினார். "உனக்கு இஷ்டம் இருந்தால் நடி" என என் விருப்பத்திற்கு விட்டு விட்டார்.

தாசரி டைரக்ஷனில் தெலுங்கு படத்தில் நடிப்பது பற்றி பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும் போது கலைமணி சார் ஒரு நாள் வீட்டுக்கு வந்து "என் இயக்கத்தில் வரப் போகும் "ராசியான பொண்ணு" படத்தின் கதாநாயகி நீதான், பிடி அட்வான்ஸ் என கொடுத்து என்னை ஒப்பந்தம் செய்தார். ஆனால் அந்தப் படத்தின் படப்பிடிப்பு துவங்குவதற்கு முன்னமே பிரபல மலையாளப்பட இயக்குநர் ப்ரியதர்ஷன் என்னை "ஒரு முத்தச்சி கதா" என்ற படத்திற்காக கேமிரா முன் நிற்க வைத்து விட்டார்.

இதற்கிடையில் நான் படத்தில் நடிக்கப் போவதாக பரவலாக தெரிந்து விட்டது. நான் மலையாளப் படத்தில் நடித்துக் கொண்டு இருக்கும் போதே இரண்டு பெரிய பேனரில் நடிக்க ஒப்பந்தமானேன். ஒன்று மணிரத்னம் இயக்கத்தில் "அக்னி நட்சத்திரம்" மற்றொன்று கமலஹாசன் ஜோடியாக "சூர சம்ஹாரம்" தமிழில் வெளியான என் முதல் படம்.

"முதல் படத்திலேயே படு கவர்ச்சியாக நடித்திருக்கிறீர்களே?"

"மணிரத்னம் என்னை ஒப்பந்தம் செய்ய வரும்போதே, இரண்டு பாடல் காட்சியில் நீச்சல் உடை அணிந்து நடிக்க வேண்டும். அதற்கு சம்மதமென்றால் நடி



நிரோஷா

நடி. நல்ல டைரக்டர். உன் இமேஜ் கெட்டுப் போகும் அளவுக்கு இது இருக்காது. அதுவும் இல்லாமல் ஒரு இளம் கதாநாயகிக்கு கிளாமர் இமேஜ் இருப்பது நல்லது" எனக் கூறி நடிக்க வைத்தார். அவர் சொன்ன மாதிரியே சிறப்பாக அமைந்தது—

"தொடர்ந்து இதுபோல கிளாமராக நடிப்பீர்களா..."

"இனி ஓரளவு கனமான கதாபாத்திரங்களை தேடித்தான் போவேன். என் டீன் ஏஜ் இருக்கும் வரை கவர்ச்சியாக உடை அணிவது. டூயட் பாடுவது தவிர்க்க முடியாத சமாசாரங்கள் என்று தான் தோணுகிறது. நீச்சல் உடை அணிய மாட்டேன் என்று வேண்டுமானால் கூறலாம்—

"படத்தில் உங்களைப் பார்க்கும் போது சில்க் ஸ்மிதாவை ஞாபகப்படுத்துகிறீர்களே?"

சற்று தெரிய சிரித்து பின் பதிலை தொடர்ந்தார். "நான் வேறொரு நடிகையைப் போல நடிக்க முயற்சிக்கவில்லை. ஏன் என் அக்காவின் சாயல்கூட தெரியக் கூடாது என்றுதான் நான் விரும்புகிறேன். இதையெல்லாம் மீறி உருவ ஒற்றுமை தெரிந்தால் நான் என்ன செய்வது? சில்க் நடிப்பு எனக்கு பிடிக்கும்"

(ல—10)



# மலையக மாணவர் கல்வி அபிவிருத்திக்கு நடவடிக்கை

கொழும்பு, ஏப் 18

மலையக மாணவர்களின் கல்வி நிலையை அபிவிருத்தி செய்ய மலையகக் கல்வி அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்துள்ளது:

இதன் ஒரு கட்டமாக மேற்படி சபை ஜீ சி ஈ சாதாரணதர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு துரிதப் பயிற்சி வகுப்புக்களை நடத்தவிருக்கிறது.

எதிர்வரும் மே மாதம் முதல் இப்பயிற்சி வகுப்புகள் பதுளை, பசறை, பொகவந்தலாவை, கொட்டகலை மஸ்கெலியா பகுதிகளில் நடத்த மலையக கல்வி அபிவிருத்திச் சபை ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

மேற்படி கல்விச் சபையின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரும், பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரி மாணவருமான திரு எஸ் விஜயசந்திரன் தினபதி நிருபருக்கு இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, ஊவா தொழிலாளர் உதவி நிலையம், தோட்டக் கிராம ஒருங்கிணைப்பு கழகம் ஆகிய மலையக தொண்டர் அமைப்புகளின் அனுசரணையுடனேயே இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டும் நாம் இதே போன்ற பயிற்சி வகுப்புகளை பதுளை, இராகலை, தலவாக்கொல்லை பொகவந்தலாவை பகுதிகளில் நடத்தினோம்,

மலையக மாணவர்கள் மத்தியில் உயர்கல்வியில் ஆர்வத்தை வளர்ப்பதும், பல்கலைக்கழகம் செல்லும் மலையக மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய உதவுவதுமே எமது கல்வி நடவடிக்கையின் அடிப்படை நோக்கங்களாகும்.

ஐக்கிய நாடுகள் சபை 1990 ஆம் ஆண்டை சர்வதேச எழுத்தறிவு ஆண்டாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கல்வித்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மலையகத்தில் மூலை முடுக்கெல்லாம் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள மலையக சமூகத்தின் நலனில் அக்கறை உள்ள அனைவரும் ஒருமித்து செயலாற்ற திடசங்கற்பம் பூண வேண்டும்.

இப்படி திரு விஜயசந்திரன் தினபதி மூலம் வேண்டுகோள் விடுத்தார்,

(ஐ—096)



## விவசாயிகளுக்கு வதிவிடப் பயிற்சி

கல்முனை ஏப் 17

வடக்கு கிழக்கு மாகாண காணி விவசாய அமைச்சு இளம் விவசாயிகளுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்றை இம்மாதம் 23ஆம் திகதி முதல் 3 வாரங்களுக்கு நடத்த திட்டமிட்டுள்ளது—

சர்வோதய நிறுவனத்துடன் இணைந்து இப்பயிற்சி முகாம் இவ்வாறு நடத்தப்படும்—

இப்பயிற்சி முகாமில் விவசாய உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, சமநல சேவைகள் காணி அபிவிருத்தி நிர்வாகம், வங்கித்துறை, சந்தைப்படுத்தல் ஆகிய விடயங்களில் பயிற்சி வழங்கப்படும்—

(ஐ—281)

## பேருவளையில் சுகாதார கண்காட்சி

பேருவளை மத்திய மகா வித்தியாலயத்தில் சுகாதாரக் கண்காட்சி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்து பார்வை இடு

மேல் மாகாண உணவு, கூட்டுறவு, கைத்தொழில் சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ எம் யூசுப், களுத்துறை அரச அதிபர் திரு அன்ரூ சில்வா, உதவி அரச அதிபர் திரு திசாநாயக்கா ஆகியோரும் காணப்படுகின்

## கிராமங்களுக்கு மின்சாரம்

கல்முனை ஏப் 17

சம்மாந்துறை உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த 11 ஆம் காலனி, 15 ஆம் காலனி சொறிக் கல்முனை ஆகிய கிராமங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டத்

ண்டு பாடல் காட்சியில் நீச்சல் உடை அணிந்து நடிக்க வேண்டும். அதற்கு சம்மதமெனில் நடியுங்கள்" என ஔிவு மறைவு இல்லாமல் கூறி விட்டார். என் அம்மாவுக்குக் கூட யோசனையாகத்தான் இருந்தது. ஆனால் என் அக்காதான் "தைரியமாக



"திரையுலகுக்கு நாம இருவருமே புதியவர்கள். இணைந்து செயல் பட்டால்தான் வெற்றிக் கொடி நாட்டலாம" என்று ராஜ்மோகன், ஜனனியிடம கூற கிறாரோ: படம்: "கவிதை பாடும அலைகள்" (ல-10)

# விஜயகாந்துக்கு பிரபல நடிகை

## கதாநாயகி ஆகிறார்

"உழவன் மகன்" படத்தை தயாரித்த இப்ராஹிம ராவுத்தர் பிலிமஸ் சார்பில் பிரமாண்டமான முறையில் புதிய படம தயாரிக்க திட்டமிட்டுள்ளார்.

இந்தப் படத்துக்கு இன்னும பெயர் சூட்டப்படவில்லை.

விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கிறார்.

கதாநாயகி மற்றும நடிகர் நடிகைகள் தேர்வு நடைபெறுகிறது-

பிரபலமான கதாநாயகி ஒருவரை விஜயகாந்த் ஜோடியாக நடிக்க வைக்க முயற்சி நடைபெறுகிறது.

ஏராளமான பொருட் செலவில் உருவாக இருக்கும இந்தப் படத்தின் கதை, திரைக்கதை வசனம, பாடல்கள் எழுதி டைரக்ட் செய்கிறார் கஙகை அமரன். (ல-10)



விஜயகாந்த்

# ராமராஜனின்

## ஜோடியாக வைதேகி

ராமராஜனுடன் புதுமுகம வைதேகி ஆடிப்பாடிய காட்சி படமாக்கப்பட்டது-

ரமயமான அந்த கிராமத்தில் சொந்தமாக பாட்டு கட்டி பாடுவதில் திறமையானவன் ராமன்-

அவனது முறைப் பெண் காவேரி ராமனின் பாட்டை ரசித்ததுடன் அவன் மீது தீராத காதல் கொண்டு உருகினாள்.

அமெரிக்காவிலிருந்து இளம பெண் ராஜீ என்பவள் பாடல்களை ஆராய்ச்சி செய்ய அந்த கிராமத்துக்கு வந்தாள்.

ராமு பாடிய நலுங்குப்பாட்டு. மஞ்சள் நீராட்டுப் பாட்டு. தலாட்டு பாட்டு போன்ற பல விதபாடல்களை ராஜீ கேசட்டில் பதிவு செய்தாள்.

ராமுவுடன் சுற்றித்திரிய ஆரமபித்தாள்.

காதலைப் பற்றி அமெரிக்க பெண் ராஜீ பாடி விளக்கம கேட்க, பதிலுக்கு ராமு பாட்டு பாடி விளக்கம அளித்தான்.

ராமுவின் போக்கு பிடிக்காததால் மனம உடைந்த முறைப் பெண் காவேரி தற்கொலைக்கு முயற்சி செய்தாள்.

இப்படிப்பட்ட காட்சிகள் இளைய ராஜா கிரியேஷன்ஸ் பட நிறுவனம சார்பில் சயதமஹரி தயாரிக்கும "புதுப் பாட்டு" என்ற படத்துக்காக படமாக்கப்பட்டது. (இ-10)

தினபதி சினிமா

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இமதியாஸ் பாக்கீர் மாக்கார் இக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்து பார்வை இடுவதைப் படத்திற் காணலாம,

ஜனாப் ஏ எம் யூசுப், களுத்துறை அரச அதிபர் திரு அன்றூ சில்வா, உதவி அரச அதிபர் திரு திசாநாயக்கா ஆகியோரும காணப்படுகின்றனர். (ஐ-0C8)

# இரத்த உறவு திருமணங்களை

## தவிர்க்க வேண்டும்

### வைத்திய நிபுணர் அறிவுரை

கண்டி ஏப் 17

இரத்த உறவுகளைக் கொண்ட குடுமபங்களில் திருமணங்களைச் செய்வதன் மூலம எதிர்காலப் பரமபரையினர் மத்தியில் கண்பார்வை குன்றுதலும செவிட்டுத் தன்மையும ஊமைத் தன்மையும மூளை வளர்ச்சியின்மையும உருவாகின்றன, சகல சமூகத்தவர்களும இரத்த உறவுகளைக் கொண்ட குடுமப திருமணங்கள் நடைபெறுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும.

இவ்வாறு கூறினார் கண்டி ஆஸபத்திரியில் கண் மூக்கு, தொண்டை, காது சிகிச்சைப் பிரிவின் விசேட வைத்திய நிபுணரான டாக்டர் பந்து எதுஸ்சூரிய.

கண்டி வைத்திய சஙகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும பொழுதே அவர் மேற்கண்ட ஆய்வு பற்றிய கருத்துக்களை வெளியிட்டார்,

அஙகு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-

தஙகளது மச்சான், மதினிமார்களைத் திருமணம செய்து கொள்ளும மரபுமுறை நாட்டில் தொடர்ந்து நிலவி வருகின்றது.

இதன் மூலம மந்த புத்தியாளர்களே அதிகமாக உலகில் தோற்றுவிக்கப்படுகிறார்கள்.

கண்டி பெரியாஸபத்திரியில் நாள் ஒன்றுக்கு சுமார் நூறு பேர் இவ்வாறு என்னால் பரிட்சிக்கப்படுகின்றனர்.

எதிர்காலத்தில் சிறந்த ஒரு பரமபரையினரைத் தோற்றுவிக்க விருமபினால் நிச்சயமாக இரத்த உறவுகளைக் கொண்ட திருமணங்களைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம செவிட்டுத் தன்மை குருட்டுத்தன்மை, மந்த புத்தி, ஊமைத் தன்மை போன்றவற்றை ஒழித்துக் கட்டலாம,

இவ்வாறு அவர் மேலும கூறினார். (ஐ-017)

# தொலைபேசி இணைப்புகள் துண்டிப்பு

இராகலை, ஏப் 17

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள கட்டணம செலுத்தாத பாவனையாளர்களின் தொலைபேசி இணைப்புகள் சமபந்தப்பட்ட திணைக்களத்தினால் துண்டிக்கப்பட்டுள்ளன-

இதனால் சுமார் 100 க்கும மேற்பட்ட தொலைபேசிகள் செயலிழந்துள்ளன- [ஐ-265]

சொறிக் கல்முனை ஆகிய கிராமங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் மின்சாரம வழங்கப் படவிருக்கிறது-

இத்திட்டத்திற்கென பிரஸ்தாப வங்கி 12 லட்சம ரூபாவை ஒதுக்கியுள்ளது-

நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம ஏ அப்துல் மஜீதின் வேண்டுகோளுக்கிணஙக மின்சக்தி அமைச்சு 15 ஆம காலனியில் உடனடியாக மின்சார வேலைகளை ஆரமபிக்குமாறு அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்துள்ளது- (ஐ-281)

# கண்டி ஆஸ்பத்திரி:

## நிரந்தர சட்ட வைத்திய அதிகாரி இல்லை

குண்டி, ஏப் 17

கண்டி பெரியாஸ்பத்திரியில் நிரந்தரமாகக் கடமை புரிவதற்கு சட்ட வைத்திய அதிகாரி ஒருவர் இல்லை-

இதனால் பொலீஸாரும பொது மக்களும பெரும பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்-

வெளி நோயாளர்களையும ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படும நோயாளர்களையும பல்வேறு சமபவஙகள் காரணமாக பரிசோதித்து வைத்திய அறிக்கை சமர்ப்பிப்பதில் சிரமஙகளும ஏற்பட்டுள்ளன-

சட்ட வைத்திய அதிகாரியாக பல ஆண்டுகள் கடமையாற்றி வந்த டாக்டர் பீ எச் ராஜபக்ஷ சேவையில் இருந்து ஓய்வுபெறும முகமாக லீவில் சென்றுள்ளார்-

இவரது இடத்துக்கு இன்னும ஒருவரும நியமிக்கப்படவில்லை-

திஙகள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் மாத்திரம பேராதனை பல்கலைக்கழகத்தில் இருந்து இரு டாக்டர்கள் இவரது பணியைக் கவனித்து வருகின்றனர்-

ஏனைய நாட்களில் சட்ட வைத்திய அதிகாரியாக கடமை புரிவதற்கு ஒருவரும நியமிக்கப்படவில்லை-

விபத்து மரணம தொடர்பாக வைத்திய அறிக்கையைப் பெற முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை இப்பொழுது உருவாகியுள்ளது-

இதன் விளைவாக வழக்குகளைத் தாக்கல் செய்வதிலும பொலீஸார் பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளனர்- [ஐ-017]

விளையாட்டு என்ற போர்வையில்

# குதிரைகளை கொல்வது

# உடன் நிறுத்தப்படவேண்டும்

## ஜீவகாருண்ய சபை குரல்

லண்டன் ஏப் 18

விளையாட்டு என்ற போர்வையில் குதிரைகளை கொல்லப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு இங்கிலாந்து ஜீவகாருண்ய சபை அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் நடந்த வராண்ட் தேசிய குதிரைப் பந்தயத்தில் ஆம்ந்து அதான்:— ஏழு குதிரைகள் இறந்து போனதையிட்டு பகிரங்க விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் இச்சபை கேட்டுள்ளது:

வருடா வருடம் லண்டன் குதிரைப் பந்தயப் பருவ காலத்தில் வராண்ட் தேசிய பந்தயம் நடத்தப்படுவது வழக்கம், உயர்ந்த வேலிகளையும் தடைகளையும், பள்ளங்களையும் நாற்நிலைகளையும் தாண்டி குதிரைகள் வேறுபாக் கடப்பதை அடைய வேண்டும்.

மிகவும் ஆபத்தான இப்பந்தயத்தில் 1946 ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை 25 குதிரைகள் விபத்தில் சிக்கி மரணமடைந்துள்ளன.

இவற்றில் எட்டுக் குதிரைகள் குறிப்பிட்ட ஒரு பள்ளத்தில் வீழ்ந்தே மரணமடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வார குதிரைப் பந்தயத்தில் ஏழு குதிரைகள் விபத்தில் சிக்கி மரணமடைந்ததை அடுத்தே இவ்விடயம் பற்றி பகிரங்க விசாரணை நடத்தும்படி இங்கிலாந்து உள்விவகார அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது,

இதேசமயம் மிருக வதைத் தடுப்புக்கான றோயல் சபை இங்கிலாந்து குதிரையோட்டிகள் சங்கத்துடன் இவ்விடயம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தத் தீர்மானித்துள்ளது: (எ—032)

## கண்காட்சி கரபந்தாட்ட போட்டி

பலாங்கொடை ஏப் 17

இராணுவ கரபந்தாட்டக் கோஷ்டியும் விமானப்படை கரபந்தாட்டக் கோஷ்டியும் பங்கு கொண்ட கண்காட்சிப் போட்டியொன்று அண்மையில் பலாங்கொடை நகர சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பலாங்கொடை பிரபல மாணிக்க வியாபாரியான திரு சுனில் டெமிலஸ் பெர்னாண்டோ வெற்றிக் கிண்ணத்துக்காக இந்தக் கண்காட்சி கரபந்தாட்டம் நடைபெற்றது.

கண்காட்சிக் கரபந்தாட்டம் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சி கரபந்தாட்டப் போட்டியை பலாங்கொடை விளையாட்டு அதிகாரி திரு காமினி விக்கிரமசிங்க ஏற்பாடு செய்திருந்தார்.

இராணுவ கோஷ்டியும் விமானப்படைக் கோஷ்டியும் பங்கு கொண்ட இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது,

பெருந் திரளான மக்கள் இந்தப் போட்டியை கண்டு களித்தனர்.

போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது: (எ—038)




## வத்தளையில் புத்தாண்டு போட்டிகள்

கொழும்பு ஏப் 18

தமிழ் சிங்கள புதவருடத்தை முன்னிட்டு வத்தளை நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புதவருட விளையாட்டுப் போட்டிகள் மிக விமரிசையாக நடைபெற்றன.

வத்தளை நகர சபை மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டிகளை வத்தளை பொலிஸார் ஏற்பாடு செய்திருந்தனர்.

வத்தளை, மாபோலை நகர சபை உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற "வத்தளை பல மண்டலய" ஆகியன உட்பட வேறு பல நிறுவனங்களின் அனுசரணையுடனேயே இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

கல்வி அமைச்சினதும் அரச நிறுவனங்கள் பலவற்றினதும் சுயாதீன பத்திரிகா சமாஜத்தின் (தினபதி – சிந்தாமணி) அனுசரணையுடன் நடத்தப்பட்ட ஜன கீ பாடல் போட்டிகள் உட்பட 25க்கும் அதிகமான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பணப் பரிசில்கள், கேடயங்கள் என்பன வழங்கப்பட்டன.

சுயாதீன பத்திரிகா சமாஜத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட ஜன கீ பாடல் போட்டியில் வத்தளை வாசியான திரு சிட்னி ஜயலத் முதலிடத்தைப் பெற்றார்.

இவருக்கான பரிசில்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வத்தளைப் பகுதி அதிகாரி திருமதி முதிதா டெப் வழங்கினார். (எ—ழ)

## பலாங்கொடையில் புத்தாண்டு போட்டிகள்

பலாங்கொடை ஏப் 17

பலாங்கொடைப் பகுதி சமூக பொருளாதார விருத்தியமைப்பைச் சேர்ந்தவர்களும் பலாங்கொடை தமிழ் வித்தியாலய பழைய மாணவர்களும் ஒன்றிணைந்து தமிழ் சிங்கள புத்தாண்டு விளையாட்டு நிகழ்ச்சியொன்றை எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்தவுள்ளனர்.

பலாங்கொடை தமிழ் வித்தியாலய விளையாட்டரங்கில் நிகழ்ச்சி நடைபெறும்.

அன்றைய தினம் கரப்பந்தாட்டம், ஓட்டப் போட்டிகள், வினோத உடைப் போட்டி உட்பட பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

சமூக பொருளாதார விருத்தி அமையத்தின் அமைப்பாளர் திரு கே சிவனடியான் இத்தகவலைத் தெரிவித்தார். (எ—038)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

பலாங்கொடை ஏப் 17

தமிழ் – சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பலாங்கொடை விளையாட்டு அதிகாரி திரு காமினி விக்ரமசிங்க ஏற்பாட்டில் ஒரு கோஷ்டிக்கு 6 பேர் என்ற ரீதியில் பன்னிரெண்டு விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. பலாங்கொடை ஜெய்லானி மத்திய கல்லூரி விளையாட்டரங்கிலே போட்டி நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியிலே இறுதி ஆட்டத்துக்கு பலாங்கொடை விக்டரி கழகமும் பிரலியண்ட் கழகமும் தெரிவாகின.

இறுதியில் "விக்டரி" விளையாட்டுக் கழகம் கிரிக்கெட் சுற்றுப் போட்டியிலே வெற்றியீட்டியது.

இந்த சுற்றுப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக ஹென்றி லோ – நோபர்ட் லூவிஸ் ஆகியோர் கடமையாற்றினர். (எ—038)

## குற்றச்சாட்டு மறுப்பு

கொழும்பு, ஏப் 18

மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் காப்டன் விரிச்சட்ஸ் மத்தியஸ்தர் லொயிட் பார்க்கரை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டை மறுத்து விட்டார்.

இச்சம்பவம் இங்கிலாந்திற்கும் மேற்கிந்திய தீவுகளுக்குமிடையில் நடைபெற்ற நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் பொழுது இடம்பெற்றது.

பார்படோஸ் ஜோர்ஜ் டவுனில் நடைபெற்ற போட்டியின் போது இச்சம்பவம் இடம்பெற்றது. (எ—455)

மாத்தளையில்

## நீர் விநியோகம் முறையாகப் பேண "டெனிடா" நடவடிக்கை

கண்டி, ஏப் 16

மாத்தளை மாவட்டத்தில் இயங்கி வரும் 40 நீர் விநியோகத் திட்டங்களை சீராகப் பேண "டெனிடா" அமைப்பு பல புதிய நடைமுறைகளை

யின்றி வழங்கும் பயிற்சியை கிராமங்கள் ரீதியாக வழங்கவும் இத்திட்டம் உதவும்.

நீர் வீண் விரயமாகாமல் உரிய முறையில் பாவனையாளர்

## இல்ல விளையாட்டுப் போட்டி




ஏப்ரல் 19 வியாழக்கிழமை

வந்து சேரும் நேரம்

| | | | |
|---|---|---|---|
| 1145 | பிராங்க்போர்ட், மாலைதீவு | டீ | எப் 3540 |
| 1200 | சென்னை | யூ | எல் 121 |
| 1215 | மாலைதீவு | யூ | எல் 101 |

## ஏபரல் 19 வியாழக்கிழமை

### வந்து சேரும் நேரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 0525 | சூரிச், சார்ஜா, மாலைதிவு | பி | பி | 602 |
| 0535 | கராச்சி, பமபாய் | யூ | எல் | 182 |
| 0710 | பாரிஸ்; சூரிச், டுபாய் | யூ | எல் | 524 |
| 0725 | சப்பல், பிராங்போர்ட் அபுதாபி | யூ | எல் | 568 |
| 0800 | டுபாய் | ஈ | கே | 800 |
| 0825 | குவைத் | யூ | எல் | 228 |
| 0905 | வியன்னா, மாலைதிவு | எல் | டி | 903 |
| 1030 | பிராங்க்போர்ட், மாலைதிவு | டி | எப் | 3540 |
| 1040 | சோபியா, டுபாய் | எல் | இசட் | 581 |
| 1055 | திருச்சி | யூ | எல் | 132 |
| 1130 | ஹம்பர்க், டஸ்கம், டுபோர்க் | எல் | ரி | 724 |
| 1140 | சென்னை, திருவனந்தபுரம் | ஐ | சி | 573 |
| 1355 | கராச்சி | பி | கே | 776 |
| 1415 | மாஸ்கோ, டுபாய் | எஸ் | யூ | 545 |
| 1500 | திருவனந்தபுரம திருச்சி | ஐ | சி | 507 |
| 1530 | சென்னை | யூ | எல் | 122 |
| 1610 | மாலைதிவு | யூ | எல் | 102 |
| 1800 | திருச்சி, சென்னை | ஐ | சி | 577 |
| 2005 | நெரிடா, புக்கியோக்கா | யூ | எல் | 457 |
| 2355 | ஹொங்கொங், பாங்கொக் | யூ | எல் | 423 |

### புறப்படும் நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| | | யூ | எல் | 503 |
| 0130 | டுபாய், லண்டன் | | | |
| 0625 | சூரிச், சார்ஜா, | பி | பி | 602 |
| | மாலைதிவு | யூ | எல் | 131 |
| 0805 | திருச்சி | | | |
| 0845 | பாங்கொக், | யூ | எல் | 622 |
| | ஹொங்கொங | ஈ | கே | 800 |
| 0915 | டுபாய் | எல் | டி | 903 |
| 1030 | வியன்னா, மாலைதிவு | | | |
| 1145 | பிராங்க்போர்ட், | டீ | எப் | 3540 |
| | மாலைதீவு | யூ | எல் | 121 |
| 1200 | சென்னை | யூ | எல் | 101 |
| 1215 | மாலைதிவு | | | |
| 1315 | ஹம்பேர்க், டஸ்கம் பேர்க் | எல் | ரி | 725 |
| 1235 | சென்னை, திருவனந்தபுரம் | ஐ | சி | 508 |
| 1505 | கராச்சி, மாலைதிவு | பி | கே | 776 |
| 1615 | மாஸ்கோ, டுபாய் | எஸ் | யூ | 545 |
| 1540 | திருவனந்தபுரம், திருச்சி | ஐ | சி | 578 |
| 1820 | தஹ்ரேன் | யூ | எல் | 261 |
| 1840 | திருச்சி, சென்னை | ஐ | சி | 574 |

## ஏப்ரல் 20 (வெள்ளிக்கிழமை)

### வந்து சேரும் நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0530 | தஹ்ரேன் | யூ | எல் | 262 |
| 0540 | பஹ்ரேன் | ஜீ | எப் | 142 |
| 0635 | குவைத் | கே | யூ | 361 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ | எல் | 504 |
| 0745 | ஜித்தா, றியாத் | எஸ் | வி | 340 |
| 1225 | பாங்கொக் | ரி | ஜி | 307 |
| 2005 | சிங்கப்பூர் | யூ | எல் | 303 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் | கியூ | 402 |
| 2305 | மாலைதீவு | யூ | எல் | 102 |

### புறப்படும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0015 | டுபாய், சோபியா | எல் | இசட் | 582 |
| 0120 | புக்கியோகா | யூ | எல் | 581 |
| 0200 | அபுதாபி, சிப்பல் பாரீஸ் | யூ | எல் | 563 |
| 0230 | டுபாய், சூரிச் பிராங்க் போர்ட் | யூ | எல் | 547 |
| 0700 | பஹ்ரேன் | ஜீ | எப் | 142 |
| 0750 | குவைத் | கே | யூ | 361 |
| 0915 | ஜித்தா, றியாத் | எஸ் | வி | 340 |
| 0930 | சிங்கப்பூர் | யூ | எல் | 302 |
| 1325 | பாங்கொக் | ரி | ஜி | 307 |
| 1940 | மாலைதிவு | யூ | எல் | 101 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் | கியூ | 402 |

குறிப்பு யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ், ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொரண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இ கே யூ — குவைத் எயர்வேய்ஸ், இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ், ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ், எஸ் வி — சவூதியா, இஸ் டி — டி ஜீ — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, டி கே — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்,

விமான சேவைகள் மாற்றம பற்றி அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 452218 (விமான நிலையம)

---

தில் இயங்கி வரும 40 நீர் விநியோகத் திட்டங்களை சீராகப் பேண "டெனிடா" அமைப்பு பல புதிய நடைமுறைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

குழாய்கள் மூலமும் குழாய் கிணறுகள் மூலமும் விநியோகிக்கப்படும நீர் விநியோகத் திட்டத்தை பொது மக்களே பொறுப்பேற்ற கடமை உணர்வுடன் செயல்படுத்த புதிய திட்டம உதவும்.

குழாய் கிணறுகளை சுத்தமாக வைத்துக் கொள்ளவும நீர் விநியோகத்தை தங்கு தடை இத்திட்டம உதவும.

நீர் வீண் விரயமாகாமல் உரிய முறையில் பாவனையாளர்களுக்கு கிடைக்கின்றதா என உறுதிப்படுத்திக் கொள்ளவும இந்தப் பயிற்சி அமையும.

குழாய்க் கிணறுகளின் அருகே தூசு படிந்து தொற்று நோய்கள் பரவும் அளவுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படாமல் இருப்பதற்கும பயிற்சி வழங்கப்படும.

இதற்கென மாத்தளை மாவட்டத்தில் உள்ள 120 மத்திய நிலையங்கள் ஊடாக கிராமங்கள் தோறும பயிற்சிகள் வழங்கப்படும. (ல-017)

---

## போட்டி

புங்குடுதிவு ஏப் 17

புங்குடுதிவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் திரு சு யோபூராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

வேலணை கோட்டக்கல்வி அதிகாரி திரு சி புலேந்திரன் இப்போட்டியின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை வழங்கினார். (எ-240)

---

# பதவி இல்லாவிட்டாலும் மக்களுக்கு சேவையாற்றுவேன்

## ஆதரவாளர் மத்தியில் முன்னாள் ராஜாங்க அமைச்சர்

கொழும்பு ஏப் 19

ராஜாங்க அமைச்சர் பதவி எனக்கு கிடைக்கவில்லை என்று நான் பின் வாங்கப் போவதில்லை, பதவி இருந்தாலும் இல்லா விட்டாலும எமது கட்சியின் வழி காட்டலின் கீழ் மிகவும் அமைதியான முறையில் பொது மக்களுக்குச் சேவையாற்றுவேன்.

முன்னாள் சுகாதார ராஜாங்க அமைச்சரும் அம்பாந்தோட்டை மாவட்ட எம்பியுமான டாக்டர் பி எம் பி சிறில் இவ்வாறு கூறினார்.

புதிய அமைச்சரவை மாற்றங்களின் பின்னர் தமது வீட்டுக்கு வந்த ஆதரவாளர்கள் மத்தியில் பேசும போதே டாக்டர் சிறில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது, பதவி வகிப்பதற்கு நான் மட்டுமதான் தகுதியானவன் என்று நினைத்திருந்தால் உண்மையில் எனது பதவி பறிபோனது குறித்து கவலைப்பட்டிருப்பேன், ஆனால் நான் அப்படிக் கருதவில்லை.

பதவி பறிபோனாலும எனது மக்களுக்காக நான் தொடர்ந்தும சேவையாற்றுவேன், பதவி இல்லை என்று நான் மனம தளரப் போவதில்லை.

என்றுமே இல்லாத ஒரு நெருக்கடியான சூழலில்தான் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச ஆட்சியைப் பொறுப்பேற்றார்.

தீவிரவாத நடவடிக்கைகளின் வேளையே ஜனாதிபதி பதவியேற்றார், இதனால் ஜனாதிபதி பல சவால்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

எனினும நாட்டில் தீவிரவாதத்தைப் பூண்டோடு ஒழித்து மக்கள் அமைதியாக வாழும ஒரு நல்ல சூழலை ஜனாதிபதி ஏற்படுத்தி விட்டார்.

இதனால் அவர் மக்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமானார், ஜனாதிபதி நாட்டின் அபிவிருத்திக்காக தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி உழைப்பார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இப்படி டாக்டர் சிறில் தெரிவித்தார். (ஐ-வ)

## புதிய கட்டிடங்கள்

கொழும்பு, ஏப் 17

தொலஸ்பாகே பகுதியில் உள்ள சகல தோட்டப் பாடசாலைகளுக்கும புதிய கட்டிடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும்.

கண்டி கல்வித் திணைக்களத்தின் பணிப்புரையின் பேரில் சீடா நிறுவனம இதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளது.

இதன்படி இப்பகுதியில் உள்ள 46 தோட்டப் பாடசாலைகளுக்கு புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும். (ஐ-வ)

---

## டெலிவிஷன்

19—4—1990

### ரூபவாஹினி

| | |
|---|---|
| 8-53 | நிகழ்ச்சி நிரல் |
| 9-00 | கரும மனம |
| 9-15 | கணனி நிகழ்ச்சி |
| 9-40 | மிநான ஒப்பாமல் எடிபு டுகஷனல் |
| 10-05 | முகாமைத்துவ நிகழ்ச்சி |
| 10-20 | எனகணதம (உ த) சிங்களம |
| 10-45 | அடிப்படைக் கல்வி நிகழ்ச்சி |
| 11-10 | எல ஆணித மைல்கல் |
| 11-35 | ஒளிபரப்பு முடிவு |
| 4-30 | உலகுவழி பொருளாதாரம - சிங்களம |
| 5-00 | செய்திகள் - சிங்களம |
| 5-15 | கருத்துப்படம |
| 5-30 | முதுஹர |
| 6-00 | மும்மணிகளுக்கு அஞ்சலி |
| 6-19 | பிரேக்கிங் ஒப் த ரம பூரான் ஃபாஸ்ற் |
| 6-30 | செய்திகள் - தமிழ் |
| 7-00 | தாசனம - தமிழ் |
| 7-30 | நெத்சர |
| 8-00 | செய்திகள் - சிங்களம |
| 8-30 | லைஃப் ஒன் ஏர்த் |
| 9-30 | செய்திகள் - ஆங்கிலம |
| 10-00 | சின்ஸ் - ஆங்கிலம |
| 10-50 | ஒளிபரப்பு முடிவு |

### ஐ டி என

| | |
|---|---|
| 6-00 | மும்மணிகளுக்கு அஞ்சலி |
| 6-15 | குாக்ளி ஷெல்பே |
| 6-30 | செய்திகள் - சிங்களம |
| 6-45 | கலாரசாங்க |
| 7-30 | பிரைட் அன்ட் பிறீஸி |
| 8-00 | டியூக்ஸ் ஆப் றசாட் |
| 9-00 | த்ச தெசின் |
| 9-30 | ஸ்ட்ரீட் லீகல் |
| 10-00 | செய்திகள் - ஆங்கிலம் |
| 10-20 | ஸ்ட்ரீட் லீகல் தொடர்ச்சி |
| 10-45 | ஒளிபரப்பு முடிவு |

தினபதி 19—4—1990 வியாழக்கிழமை


# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்


# மழையினால் மருந்துசாலை இடிந்து வீழ்ந்ததாக எனக்கு பொலிஸார் அறிவித்தனர்

## டாக்டரின் மரண விசாரணையில் மனைவி

கொழும்பு, ஏப்- 18

"எனது கணவரின் மருந்த சாலை பலத்த மழையின் காரணமாக இடிந்து விழுந்தது என பொலிஸார் எனக்கு அறிவித்தனர். நான் அவ்விடத்துக்கு விரைந்தோடினேன். அவ்வேளை என் கணவரை கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்று விட்டனர்"

கொழும்பு, கொட்டாஞ்சேனை பாபர் வீதியில் தனியார் மருந்த சாலை ஒன்றை நடத்திய டாக்டர் காராளபிள்ளை சுந்தரமபிள்ளையின் (வயது 49) மரண விசாரணையின் போது அவரது மனைவியான ராதா சுந்தரமபிள்ளை சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில், கொழும்பு நகர திடீர் மரண விசாரணை அதிகாரி திரு எலோய் பெரேரா முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

கொட்டாஞ்சேனை பொலிஸார் சாட்சியங்களை நெறிப்படுத்தினர்.

திருமதி ராதா சுந்தரமபிள்ளை தனது சாட்சியத்தின் போது மேலும் கூறியதாவது—

"காலஞ்சென்றவர் எனது கணவர். நாம கொமபனித்தெரு பாக் வீதியில் வசிக்கிறோம. சமபவ தினம மாலை நாலரை மணியளவில் எனது கணவர் தனது மருந்துசாலைக்குச் சென்றார்.

கொட்டாஞ்சேனை, பாபர் வீதியிலேயே அந்த மருந்துசாலை உள்ளது.

மாலை 5 மணியளவில் பலத்த மழை பெய்தது. இந்த மழையினால் எனது கணவரின் மருந்த சாலை கட்டிடம இடிந்து வீழ்ந்ததாக அறிந்தேன். மழையையும பொருட்படுத்தாது உடனே நான் அவ்விடத்துக்கு விரைந்தேன்.

அங்கு சென்று என் கணவரைப் பற்றி விசாரித்தேன். கணவரை கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதாக அறிந்தேன்.

உடனே கொழும்பு பெரியாஸ்பத்திரியின் திடீர் விபத்துப் பிரிவுக்குச் சென்று பார்த்தபோது என் கணவர் இறந்து காணப்பட்டார்"

கொழும்பு பிரதி சட்ட வைத்திய அதிகாரி திரு எல் பீ எல் டி அல்விஸ் பிரேத பரிசோதனையை நடத்தினார்.

விசாரணை முடிவில் திடீர் விபத்து மரணம என தீர்ப்பளிக்கப்பட்டது.

(ந-வ)



இவ்வருட ஹஜ் யாத்திரை ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக உயர்மட்ட அதிகாரிகளின் மாநாடு ஒன்று கடந்த 12ஆம திகதி முஸ்லிம சமய கலாசார ராஜாங்க அமைச்சில் நடைபெற்றது—

ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பதையும் —

அமைச்சின் செயலாளர் ஜனாப் எஸ் எச் எம ஜமீல் பணிப்பாளர் அல்ஹாஜ் எம எம அன்ஸார் உட்பட குடியகல்வு குடிவரவு அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம—

[ந—007]

ஊழல், மோசடி, நிர்வாக சீர்கேட்டினால்

# 48 கூட்டுறவு சங்கங்கள் நட்டத்தில் இயங்குகின்றன

## அமைச்சர் மல்லிமாராச்சி தகவல்

கொழும்பு, ஏப்- 18

ஊழல் மோசடி நிர்வாகச் சீர்கேடு போன்ற காரணங்களினால் நாட்டில் உள்ள 48 கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்குகின்றன,

உணவு கூட்டுறவுத்துறை அமைச்சின் நடவடிக்கைகள் சமபந்தமாக நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது இது தெரிய வந்துள்ளதாக அமைச்சர் திரு வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார்—

அவர் மேலும் தெரிவித்ததாவது—

நட்டத்தில் இயங்கும் இச் சங்கங்களில் எட்டு சங்கங்கள் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளன—

இச்சங்கங்கள் விரைவில் பொது மக்களுக்கு சிறந்த சேவையை செய்யக் கூடிய விதத்தில் மறுசீரமைக்கப்படும,

இதற்கான விசேட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும—

இப்படி அமைச்சர் திரு மல்லிமாராச்சி கூறினார்"—

[ந—ழ]

# உள்ளூராட்சி தேர்தல்களில் இளைஞர் பங்களிப்பு

## பற்றி சர்வகட்சி மாநாட்டு கமிட்டி

கொழும்பு, ஏப்- 18

உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் இளைஞர்களை போதுமான அளவு ஈடுபடுத்துவது தொடர்பாக சர்வ கட்சி மாநாட்டு கமிட்டி குழுவில் ஆராயப்பட்டது.

அடுத்த மந்திரி சபைக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டங்களில் திருத்தம கொண்டு வருவது தொடர்பாக ஆராயப்பட இருப்பதாக ஜனாதிபதி திரு அர் பிரேமதாச நேற்று முன்தின கூட்டத்தில் கூறினார்—

ஜனாதிபதி செயலகம நேற்று முன்தினம விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வ கட்சி மாநாட்டுக் கமிட்டி கூட்டம நேற்று முன்

1— (அ) 18 வயதிற்கும 35 வயதிற்கும இடைப்பட்டவர்கள் இளைஞர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும—

(ஆ) இந்த வயதுப் பிரிவில் இருந்து 40 வீதத்திற்கு குறையாத வகையில் தேர்தல் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் படி கட்சிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்—

2— வாக்காளர் ஒருவர் தங்களுக்குள்ள மூன்று விருப்ப வாக்குகளை மூன்று பேருக்குமே போடலாம— அல்லது அவர் விரும்பினால் தனது 3 வாக்குகளையும ஒரு இளைஞருக்கு அல்லது ஒரு பிரதிநிதிக்குப் போடலாம்—

3— தேர்தல் சட்டத்தின் இம் 12½ வீத வெட்டுப் புள்ளி முறை மாற்றி ஒரு ஆசிரி...

ஆடம்பர மாளிகையில் இயங்கிய

# சட்ட விரோத வடிசாலை: பம்பலப்பிட்டியில் முற்றுகை

## நாளாந்தம் 10,000 போத்தல் கள்ள சாராயம் உற்பத்தி

கொழும்பு, ஏப்- 18

அரசு உற்பத்தி செய்யும சாராயத்தைப் போலவே

சாலைக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு சீல்களைப் போன்ற சீல்களும் கைப்பற்றப்பட்டன,

தாகப் பொலீஸார் கூறினர்—

இந்த வேட்டை தொடர்பாக வடிசாலை மேற்பார்வை

கிழக்கு மாகாண ரயில் பாதை

# மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் வரை நீடித்தல்:

## ஜப்பானிய அதிகாரிகளுடன் ஆராய்வு

கிழக்கு மாகாண ரயில் பாதையை மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் வரை விஸ்தரிப்பது தொடர்பாக ஜப்பானிய அதிகாரிகளுடன்

ருக்கிறார்—

ஜனாப் பராஜ்ராட் அல் ஹாஜ் அஸ்வரை அமைச்சு அலுவலகத்தில் வைத்துச் சந்

கொழு பு, ஏப்- 18

அரசு உற்பத்தி செய்யும சாராயத்தைப் போலவே சட்ட விரோதமாக சாராயம உற்பத்தி செய்யப்பட்டு வந்த வடிசாலை ஒன்றைப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்-

பம்பலப்பிட்டி மிலாகிரிய பகுதியில் முன்னாள் மேற்கூத்திய ராஜதந்திரி ஒருவருக்குச் சொந்தமான ஆடம்பரமான மாளிகையில் இந்த வடிசாலை இயங்கிவந்திருக்கிறது-

சட்ட விரோதமாக இயங்கி வந்த வடிசாலைகளில் இதுவே மிகுப் பெரியதும நவீனமயமானதும ஆகும-

வெளிநாட்டு மதுபான விற்பனையாளர் ஒருவருக்குச் சொந்தமான இந்த வடிசாலை கடந்த 6 மாத காலமாக இயங்கி வந்திருப்பதாகப் பொலீஸார் கூறினர்-

புலனாய்வாளர்களின் தகவலின்படி இந்த வடிசாலையில் நாள் ஒன்றுக்கு பத்தாயிரம போத்தல் கள்ளச் சாராயம உற்பத்தியாகி வந்துள்ளது- சந்தேகநபருக்குச் சொந்தமான விற்பனை நிலையங்கள் மூலமாக அசல் சாராயம போல இது விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது-

இந்த வேட்டையின் போது 15 ஆயிரம் சாராயம அடைக்கப்பட்ட போத்தல்களும் வெற்றுப் போத்தல்களும சாராயம் அடைக்கும நவீன இயந்திரமும கைப்புற்றப்பட்டன-


வெற்றின் பெருமதி பல லட்சக்கணக்கான ரூபாவாகும போலி லேபல்களும மூடிகளும கண்டுபிடிக்கப்பட்டன- அரச வடிசாலைக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு சீல்களைப் போன்ற சீல்களும் கைப்புற்றப்பட்டன,

முன்னாள் ராஜதந்திரியின் இந்த வீடு 25 ஆயிரம ரூபா மாத வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது- ச

தமது வாடகைக்காரரின் நடவடிக்கைகள் பற்றி வீட்டு உரிமையாளருக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை-

வடிசாலையின் பெருமபகுதி கராஜிலும வீட்டின் பின் பகுதியிலுமே இயங்கி வந்துள்ளது- சந்தேகம எழாமலிருக்க கராஜின் முன்புறத்தில் எந்நேரமும ஆடமபரமான பென்ஸ் கார் ஒன்ற நிறுத்தப்பட்டு வந்ததாகப் பொலீஸார் கூறினர்-

இந்த வேட்டை தொடர்பாக வடிசாலை மேற்பார்வையாளர் உட்பட ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்-



பம்பலப்பிட்டி மெல்போர்ன் வீதியில் இயங்கிய வடிசாலையை பொலீஸார் முற்றுகையிட்ட போது எடுக்கப்பட்ட படம்-

கைப்பற்றப்பட்ட சாராயத்தைப் பரிசோதனை செய்ததில் அதில் நச்சுத் தன்மை இருக்கக் காணப்பட்டது- பாவனையாளர்களின் உடலுக்கு இது தீங்கு விளைவிக்கக் கூடியது.

இந்த வடிசாலையில் பின் தங்கிய வெகு தொலைவில் உள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்களே வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்-

நபர் ஒருவருக்கு மாதச் சம்பளமாக 6 ஆயிரம ரூபா வழங்கப்பட்டு வந்துள்ளது- இங்கு வேலை செய்பவர்கள் வெளியில் போக முடியாது- பெருமபாலும் இரவு நேரங்களிலேயே வேலை நடக்கும-

வடிசாலை இரகசியம வெளியே தெரியாமல் இருக்க வேலை செய்பவர்களுக்கு இலவச சாப்பாட்டுடன் சிகரெட் சாராயமும வழங்கப்பட்டதோடல்லாமல் அவர்களின் சுகபோகத்திற்குப் பெண்களும வழங்கப்பட்டு வந்திருப்பதாக பொலீஸார் கூறினர்-

தலைமறைவாகி உள்ள சந்தேகநபரைத் தேடி நாடு பூராவும் வலை விரிக்கப்பட்டுள்ளது-

இந்த நபருக்கு நகரிலும் சுற்றாடலிலுமாக குறைந்தபட்சம பதிவு செய்யப்பட்ட ஏழு வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள் இருப்பதாகப் பொலீஸார் கூறினர்-

[ந—கு]

---

...பாதையை மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் வரை விஸ்தரிப்பது தொடர்பாக ஈரானிய அதிகாரிகளுடன் கலந்தாராயப்படும்-

ஈரானியத் தூதரகப் பொறுப்பதிகாரி ஜனாப் அப்துல் ரெஸா பராஜ்ராட் இதுபற்றி முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வரிடம பிரஸ்தாபித்திருக்கிறார்-

ஜனாப் பராஜ்ராட் அல்ஹாஜ் அஸ்வரை அமைச்சு அலுவலகத்தில் வைத்துச் சந்தித்த போது இலங்கைக்கு ஈரான் வழங்கும் பல்வேறு உதவிகள் பற்றிப் பிரஸ்தாபித்த அல்ஹாஜ் மட்டக்களப்பு ரயில் பாதையைப் பொத்துவில் வரை விஸ்தரிப்பது தொடர்பாகவும பிரஸ்தாபித்தார்-

[ந—007]

---

## நான்கு தினங்களில் பாஸ்போர்ட்

கொழு பு, ஏப்- 18

நான்கு தினங்களுக்குள் பாஸ்போர்ட் வழங்குவதற்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம நடவடிக்கை எடுத்துள்ளது-

இதன் பொருட்டு இப்போது புதிதாக 14 கருமபீடங்கள் திறக்கப்பட்டுள்ளன-

பிறப்புச் சான்றிதழ் அடையாள கார்டு போன்றவற்றில் சந்தேகம ஏற்படும பட்சத்தில் மேலதிக விசாரணைகளின் பொருட்டு பாஸ்போர்ட் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படலாமென திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம தெரிவித்தார்-

[ந—கு]

---

...யில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வ கட்சி மாநாட்டுக் கமிட்டி கூட்டம நேற்று முன்தினம மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது-

அங்கீகரிக்கப்பட்ட 19 கட்சிகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பின்வரும விடயங்கள் பற்றி ஆராயப்பட்டன.

...

3- தேர்தல் சட்டத்தின் கீழ் 12½ வீத வெட்டுப் புள்ளி முறை ... ஆசிரியர் ... வெற்றிக் கொள் ... அனைத்தும ... அப் ... அக் கட்சிக்கு தொகுதிகள் ஒதுக்கப்படும-

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது- [ந—கு]

---


இப்பொழுது பெறலாம்!

குணசேன

ஆங்கில-தமிழ்

சுருக்க அகராதி

ஆக்கியோன் - எஸ் நடராசா

விலை ரூ. 190.00




பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்

எம். டி. குணசேன அன்ட். கம். லிமிட்.

217- ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்



இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் 5குணசேன மாவத்தை கொழும்பு 12 தெஹிவளை. தபால் பெட்டி இல 1613. வெளியிட்ட திகதி 19 ஏப்ரல் 1990

DINAPATHI. 5, Gunasena Mawatha, Colombo — 12
P. O Box 1613